Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 24 | 09-08-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 172

## வடபகுதிக்கு தார் அனுப்ப பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற தாரைக் கொண்டு விடுதலைப் புலிகள் விமானஓடு பாதை ஒன்றை அமைத்து வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு காரணம் காட்டி வடபகுதிக்குதாரை அனுப்பி வைப்பதை நிறுத்தியுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் விமான ஓடுபாதையை அமைத்து வருகின்றனரா என்பதுபற்றி விசாரணை நடாத்தப்பட்டு அவ்வாறு இல்லை எனின் தார் வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பிடியிலிருந்து வடபகுதி 3 மாதத்திற்குள் விடுவிக்கப்படும்

## பிரசார கூட்டத்தில் டி.பி. விஜேதுங்கா

[கொழும்பு]

"ஐக்கிய தேசியக்கட்சி புதிய அரசாங்கத்தை அமைத்ததும் வடபகுதியை புலிகளின் பிடியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விடுவித்து விடுவேன்" என்று கடந்த வெள்ளிக்கிழமையன்று அக்குரஸ்ஸ பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சூளுரைத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இன அடிப்படையில் நாட்டை பிளவுபடுத்துவதற்கு விடுதலைப் புலிகளோடும், முஸ்லிம் காங்கிரசுடனும் பொதுஜன ஐக்கிய முன்னணி உடன்பாடு செய்துள்ளது எனவும் தெரிவித்தார்.

இது நடைமுறைப்படுத்தப்பட முடியாதது இன அடிப்படையில் நாடுகளைப் பிரிப்பது ஏற்கப்படக் கூடியது அல்ல. பொதுஜன ஐக்கிய முன்னணியை வழி நடத்தும் சிலர் இத்தகைய அபாயகரமான எண்ணங்களைக்கொண்டுள்ளனர். புவியியல் அடிப்படையிலேயே நாடுகள் பிரிக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதையும் வழங்க மாட்டோம். ஈழம் ஒரு கனவு மட்டுமே. ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அதற்கு உதவுகிறது எனவும் தெரிவித்தார்.

## கரையோரப் பகுதிகள் மீது பலத்த பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

தொண்டமனாறு கரையோரக் குடியிருப்புகள் மீது கடற்படையினர் நேற்று முன்தினம் மாலை 6.00 மணி முதல் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இப் பகுதிகள் மீது இடைவிடாது இக் குறித்த நேரத்தில் இருந்து தொடர்ச்சியான தாக்குதல்கள் நடைபெற்றன இரவு நேரங்களிலும் கடற்படையினர் தாக்கியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிமீது ஆங்காங்கு இரவு பகலாக ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றபோதிலும் சேத விபரங்கள் பற்றி அறியப்படவில்லை. (யோ)

## பலாலிமுகாமை சூழவுள்ள வீடுகள் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ தளத்தைச் சூழவுள்ள பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளை இராணுவத்தினர் குண்டுகள் வைத்து தகர்த்து வருவதாக தெரியவருகிறது. அண்மைக் காலங்களில் தளத்தினுள் புலிகள் ஊடுருவி தாக்குதல்களை நடாத்தி வருவதைத் தொடர்ந்து பாதுகாப்பை பலப்படுத்து முகமாக இவ்வாறு படையினர் வீடுகளைஉடைத்து வருகின்றனர் என கூறப்படுகிறது.

நேற்றும், நேற்று முன்தின (6 ஆம் பக்கம் பார்க்க)

## றுகுணுவில் தபால் பொதிகள்

(வடமராட்சி)

காங்கேசன்துறைக்கு வந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று பகல் 11.00

## கலந்துரையாடல்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வுக்கு யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர் மற்றும் நிரந்

## பலாலி மீதான புலிகளின் தாக்குதல் புறம்தள்ளக் கூடியது அல்ல

### இராணுவ ஆய்வாளர்கள் கருத்து

(கொழும்பு)

பல வகைகளில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பலாலி விமானப்படைத்தளத்தின் தாக்குதல் நடவடிக்கைகளில் பத்தோடு பதினோராவது என்று புறம்தள்ளக்கூடியதல்லஎன்றே இராணுவ ஆய்விக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவ்வார இதழ் மேலும் தெரிவிக்கையில், நாட்டை ஆளும் அதிகாரத்

## வடக்கு-கிழக்குபகுதிகளுக்கு கனேடிய நிறுவனம் உதவி

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கென நிவாரண உதவிகளை அனுப்பி வைக்க கனேடிய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இலங்கையில் சமாதானத்துக்கான கனேடிய நிவாரண இயக்கம் என்ற இப் புதிய அமைப்பு நிவாரண உதவிகளை அனுப்பி வைப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளுக்கு உதவி செய்யுமாறு கோரி யாழ். அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாக கொழும்பு வார (6 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் கடற் பகுதியில் 20 மீனவரைக்காணவில்லை

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியதாகவும் இவர்களில் 20 பேர் காணாமற் போயுள்ளதாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களில் அனேகமானோர் சிங்கள மீனவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுஜனஐக்கிய முன்னணி 124 இடங்களைப் பெறும்

### கருத்துக் கணிப்பீடு கூறுகிறது

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வேண்டுகோளுக்கு இணங்க இருபத்திமூன்றுமாவட்டங்களில எடுக்கப்பட்ட தேர்தல் கணிப்பீட்டின்படி பொதுஜன ஐக்கிய முன்னணியின் சுமார் 124 உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எழுபதிற்கும் குறைவான உறுப்பினர்களே தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும்எனவேபொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பது உறுதி என அக் கணிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தவர்கள் ஐ தே. க தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளனர்

பலதரப்பட்ட மக்களிடமும் அதிகாரிகளினால் இக்கணிப்பீடு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவ் அறிக்கை நேற்று முன்தினம் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறை குறித்து 5 ஐ. தே க முக்கியஸ்தர் கைது

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான

யக்கா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(வடமராட்சி)

காங்கேசன்துறைக்கு வந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று பகல் 11.00 மணியளவில் வந்து சேர்ந்த 'றுகுணு' கப்பலில் சுமார் 300 தபால் பொதிகள் வந்துள்ளன.

இத்தபால்பொதிகள் இன்று காலை கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நாளை முதல் விநியோகிக்கப்படும். இக்கப்பலில் 830 மெட்றிக்தொன் பொருள்கள் வந்துள்ளன. பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனேயேஆரம்பமானது. (யோ)

## வவுச்சர்கள் வந்தன

(வடமராட்சி)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களது ஆகஸ்ட்மாத ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று பருத்தித்துறைக்கு வந்த 'றுகுணு' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. (யோ)

தேர்வுக்கு யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர் மற்றும் நிரந்தர நோக்குநர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை 11ஆம் திகதி மாலை 5மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்டோரை தவறாது கலந்து கொள்ளும்படி யாழ். நல்லூர் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலந்திரன் கேட்டுள்ளார்.

## திருமலைக்கு துருப்புக் காவிகள்

அண்மையில் சிறிலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட ரஷ்ய தயாரிப்பான பி. எம். பி. 2 ரக துருப்புக்கள் காவிச் செல்லும் வாகனங்கள் புகையிரத மூலமாக திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

(கொழும்பு)

பல வகைகளில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பலாலி விமானப்படைத்தளத்தின் உள்ளே மேற்கொண்ட புலிகளின் ஊடுருவலும், தாக்குதல் நடவடிக்கையும் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளில் பத்தோடு பதினோராவது என்று புறம்தள்ளக்கூடியதல்லஎன்றே இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவ்வார இதழ் மேலும் தெரிவிக்கையில், நாட்டை ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தேர்தல் பிரசார போரில் அரசியல் தலைவர்கள் தம்மை மறந்து ஈடுபட்டுள்ளபோது இந்நாட்டில் பெரும் போர் ஒன்றும் நடந்துகொண்டிருக்கின்றது என்ற யதார்த்த நிலையை சகலரும் உணர்ந்து கொள்ளும் வகையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது என அவதானிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பலாலி முகாம் மீதான தாக்குதல் தொடர்பான தகவல்கள் வவுனியா பிரதான பாதுகாப்பு முகாமை எட்டிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அழிக்கப்பட்ட ஹெலி 40கோடிபெறுமதியானது

(கொழும்பு)

பலாலியில் கரும்புலிகள் ஊடுருவி நடத்திய தாக்குதலில் அழிக்கப்பட்ட பெல் 212 ரக உலங்குவானூர்தி 40 கோடி ரூபா பெறுமதியானது என சண்டேலீடர் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் குறித்து சண்டே லீடரின் பாதுகாப்பு செய்தியாளர் எழுதியுள்ள குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான வன்முறைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என 5 ஐ. தே. க. உறுப்பினர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தர்மசிறி சேனாநாயக்கா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இவர்களில் ஒருவர் அமைச்சர், மூவர் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றையவர் ஐ தே. க. வேட்பாளர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பெர்னாண்டோ பிள்ளைக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளைக்கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபரிடம் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் திடீர் என நீக்கப்பட்டு புதிய இருவர் வழங்கப்பட்டு இருப்பதாகவும் இது தன்னை கொலை செய்வதற்கான ஒரு சதிமுயற்சியாக இருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்-

# கலகக்காரர்களை கண்டவுடன் சுட்டுக்கொல்லுமாறு உத்தரவு

(கொழும்பு)

கலகக்காரர்களை கண்டவுடன் சுட்டுக்கொல்லும்படி பொலிசாருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு உதவும் பொருட்டு தேர்தல் தினத்தன்றும், அதற்கு மறுநாளிலும் கலவரங்களில் ஈடுபடும் எவரையும் கண்டவுடன் சுட்டுக் கொல்லும்படி பொலிசாருக்கு பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் தேர்தல் முடிவுற்றதும் சிறு காலத்திற்கு உடனடியாக ஊரடங்கு அமுலுக்கு கொண்டுவரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆபத்து வேளைகளில் பொலிசாருக்கு உதவும் வகையில் ஆயுதப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கலகம் அடக்குவது தொடர்பாக விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ள பொலிசார் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தமது முழுச் சக்தியையும் பாவித்து கலகம் அடக்கும் பணியில் ஈடுபடுவர் எனவும் பொலிஸ் திணைக்கள உயர் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

அத்துடன் இவ் விசேட பொலிஸ் குழுவுக்கு ரப்பர்த் தோட்டாக்கள், கண்ணீர்ப் புகைக்குண்டுகள் உட்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு அமைப்பாளர்மீது மாகாண உறுப்பினர் சூடு

(கொழும்பு)

இங்கினியாகல என்னும் இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவாமாகாண சபை உறுப்பினர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இச்சம்பவத்தில், இங்கினியாகலபொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் பி. ஏ. உபதிலக்க என்பவர் ஊவா மாகாண சபையின் ஐ.தே.க உறுப்பினர் செனவித் பண்டாவினால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

மேற்படி மாகாணசபை உறுப்பினர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மருத்துவபீட மாணவர் இன்று பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்சழக மருத்துவபீட மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பும் மறியற் போராட்டமும் நடத்துவதென தீர்மானித்துள்ளனர்.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைத்துக் கொள்வதென பல்கலைக் கழக பேரவைக்கு சிபார்சு செய்வதென்ற மருத்துவ சபையின் முடிவை எதிர்த்து இப் பகிஷ்கரிப்பும் மறியல் போராட்டமும் நடைபெற

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸ் அரசின் நடவடிக்கைக்கு அந்நாட்டு இடதுசாரிகள் கண்டனம்

## இலங்கைத் தமிழருடன் இணைந்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதிகளை சுவிஸ் நாட்டிலிருந்து திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு எடுக்கும் நடவடிக்கைகளை கண்டித்து சுவிஸ் இடதுசாரி முற்போக்கு அமைப்புக்களுடன் அந்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டம் சூரிச் கன்ரோனில் நடைபெற்றது. ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழீழ தகவல் நடுவத்தின் சுவிஸ் கிளையினரும் கலந்து கொண்டனர்.

இவ்வார்ப்பாட்டத்தின் போது தமிழீழ தகவல் நடுவத்தின் சுவிஸ் கிளையினர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர். அவ்வறிக்கையில் இலங்கையில் தமிழரின் உயிருக்கு உத்தரவாதமில்லாத தற்போதைய சூழ்நிலையில் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

ஆட்சியில் நீடிக்க முயற்சி செய்தால்

# பிலிப்பைன்சின் மார்க்கோசை போல ஐ.தே.கராணுவத்தால்விரட்டப்படுமாம்

(கொழும்பு)

பிலிப்பைன்சின் மார்க்கோசைப் போலவே, சிறிலங்காவின் ஐ. தே. க. செயறபடுவதாகவும், ஆட்சியில் நீடிக்க ஐ. தே. க. முயற்சித்தால் இராணுவத்தால் விரட்டப்படும் சூழல் ஏற்படும் எனவும், யுத்தத்தை நிறுத்துவதற்காக ஆட்சி மாற்றம் வேண்டுமெனப் படையினரில் பலரும் விரும்புவதாகவும், கொழும்பிலிருந்து வெளிவரும் திவுலே என்ற பிரபல சிங்களப் பத்திரிகைதெரிவித்துள்ளது.

பிலிப்பைன்சில் மார்க்கோஸ் இராணுவத்தால் விரட்டப்பட்டு அக்கியூனோ பதவியில் அமர்த்தப்பட்டது போன்றதொரு நிலைமையை சிறிலங்காவில் ஏற்படுத்துவதை தவிர வேறு வழியில்லை என்று முப்படையினரும் அரசுக்கு எச்சரிக்கை விட இருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

6 ஆம் பக்கம் பார்க்க)

சிவன் தேவஸ்தானம் ஆவரங்கால்

# பூங்காவன உற்சவம்

காலம்: 10-08-1994 புதன்கிழமை

காலை 9-00 மணிக்கு அபிசேகம் இடம் பெற்று மாலை 6-00 மணிக்கு திருக்கல்யாணமும் சுவாமி வீதி உலாவருதலும்.

பிற்பகல் 6-30 மணிக்கு நாதஸ்வர தவில் கச்சேரி

S. இராமையா குழுவினர் (ஆவரங்கால்)
N. K. பத்மநாதன் குழுவினர் (அளவெட்டி)
M. P. பஞ்சாபிகேசன் குழுவினர் (சாவகச்சேரி)
V. K கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர் (கோண்டாவில்)
K. நித்தியானந்தன் குழுவினர் (இணுவில்)
k. சிவகுமார் குழுவினர் (சித்தங்கேணி)
N. R. s. ரவீந்திரன், சுதாகர் குழுவினர் (இணுவில்)
T. உதயசங்கர் குழுவினர் (அளவெட்டி)

இரவு 10-00 மணிக்கு

## இன்னிசை மாலை

ஈழநல்லூர் அருணா இசைக்குழுவினர்

சப்பரம், பூந்தண்டிகை (பஞ்சாட்சரம் இணுவில்)
மேடை அலங்காரம் திருநாவுக்கரசு மல்லாகம்
ஒளி - கணபதி லைற் வல்வெட்டித்துறை
இந்திரதீபம் பருத்தித்துறை
மகாமாரி லைற் மல்லாகம்
ஒலி - றோயல் சவுண்ட் கீரிமலை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவன் தேவஸ்தானம்

விளம்பரம் அன்பளிப்பு
கிருஷ்ணா உணவகம்
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.

(9066)

## இலக்கத் தகடுகள் விநியோகம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாட்டுவண்டில்கள், வளர்ப்பு நாய்கள், சைக்கிள்கள் என்பனவற்றிற்குரிய 1994ஆம் ஆண்டிற்கான உரிமை இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன.

மேற்படி இலக்கத் தகடுகளை வலிமேற்கு பிரதேச சபையின் சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்களில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என மேற்படி பிரதேச சபைச் செயலாளர் திரு. க. திரவியம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை தெற்கு J/17 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த வ. தம்பிஐயா என்பவரது இலவச உலர் உணவு முத்திரையின் அடிக்கட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

(88)

# ஆட்கொணர்வு மனுவினால் விடுதலை செய்யப்பட்டார்

(கொழும்பு)

படகில் இந்தியா செல்ல முயன்ற வேளை கடற்படையினரால் கைதான மன்னார் பழியாறு வெள்ளாங் குளத்தைச் சேர்ந்த தம்புலிங்கம் சாந்தகுமார் என்னும் இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவரை விடுதலை செய்யக்கோரி இவரது பாட்டனார் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார்.

சாந்தகுமார் கைது செய்யப்படவில்லை என்று இரண்டாவது பிரதிவாதியான கடற்படைத் தளபதி மன்றுக்கு சமர்ப்பித்த பதில் ஆட்சேபனை சத்தியக் கடதாசியில் தெரிவித்திருந்தார்.

இவரை மன்றில் ஆஜர் செய்து விடுதலை செய்ய நீதியரசர் சரத் என் சில்வா கடந்த 25-ம் திகதி உத்தரவிட்டார்.

இதனையடுத்து நான்காவது பிரதிவாதியின் பிரதிநிதி சாந்தகுமாரை சட்டத்தரணியிடம் ஒப்படைத்தார். இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் வீடு திரும்பினார்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு விடுதலைபுலிகளுடன் பேசுக

-எடியுகேசன் இன்ரநாஷனல் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைமூலம் தீர்வுகாண முயற்சிக்காது விடுதலைப்புலிகளுடன் நேரடிப்பேச்சுவார்த்தைகளை நடத்தி உடனடியாக அரசியல் தீர்வு காணுங்கள்.

என்று கோரும் கடிதம் ஒன்றை 'எடியுகேஷனல் இன்ரநாஷனல்' என்ற ஆசிரியர் சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தின் ஆசியபசுபிக் பிராந்திய பிரதம இணைப்பாளரான குர்ணாம் சிங் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, பாங்கொக்கில் நடைபெற்ற 140 நாடுகளைச் சேர்ந்த 25 ஆசிரிய சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 2 கோடிக்குமேற்பட்ட ஆசிரியர்களின் அமைப்பாகிய எடியுகேசன் இன்ரநாஷனல் பசுபிக் பிராந்திய மகாநாடு மேற்படி கோரிக்கையை தங்கள்முன் வைக்க வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

எமது சம்மேளனத்தின் ஏகமனதான இத்தீர்மானத்துக்கு ஏற்றமுக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுத்து அரசு நல்லதொரு தீர்வு காணும் முயற்சிகளை மேற்கொள்ளும் என நாம் நம்புகிறோம்.

# மனிதஉரிமைநிலைப்பாட்டை கட்சி தெளிவாக்க வேண்டும்

- ஐ. உ. பா. இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

மக்களின் வாக்குகளை நாடும் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் மனித உரிமைகள் சம்பந்தமான தங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை தெளிவாகவும், ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும், சுயேட்சைக் குழுக்களுக்கும் இது தொடர்பாக பன்னிரண்டு வினாக்களை அனுப்பி வைத்துள்ள அவ் இயக்கம் அவற்றிற்கான பதில்களை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் முன் வைக்க வேண்டுமெனவும்கோரிக்கை விடுத்துள்ளது.

# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம்- யாழ்ப்பாணம்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் அரசாங்க அதிபர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அவர்களினால் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி பிற்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் விபரம்: காப்புறுதிக்கூட்டுத்தாபன கட்டிட அடிக்கூரை (சீலிங்) திருத்த வேலை.
2. ரூபா 5 லட்சத்துக்கு (500,000/-) அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு சட்டிடம்/ நிர்மாணத்திணைக்களத்தில் அல்லது ஐசிரிஏடி ஸ்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இக்கேள்விக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவராவார்.
3. மேற்படி கேள்விப்பத்திரங்களை 1994ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16-ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பரிபாலனக்கிளை செயலகம், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி வைப்பிற்கு சமர்ப்பிக்க வேண்டிய கீழ்க்கண்ட வைப்புப் பணத்தை செயலகம் யாழ்ப்பாணத்தில் வைப்புச்செய்யலாம்.

## பின்போடப்பட்டுள்ளது



கடந்த 11-07-94 அன்று பூநகரி இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவெய்திய,

லெப். கோபால்/

## நினைவு கூருகின்றோம்...

### 09-08-1994...

1990-ம் ஆண்டு அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

வடமராட்சி, வலிகாமம், தீவகப்பொறுப்பாளரான,

**மேஜர் ஜேம்ஸ்** (உருத்திராபதி சிறீதர்-நெடியகாடு -வல்வெட்டித்துறை)

**ஞானம்** (ஐயாத்துரை கோபாலகிருஷ்ணன்-ஞானம் வீதி, அச்செழு-யாழ்)

1991-ம் ஆண்டு ஆனையிறவில், முகாமிலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். விக்கி** (விக்கினேஸ்வரி சதாசிவம்-பூந்தோட்டம் -வவுனியா)

**விஜித்திரா** (புஸ்பராணி செல்லையா-முறிகண்டி - கிளிநொச்சி)

1992-ம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் பாம்பு கடித்ததில் எமைப் பிரிந்த,

**லெப். முரளிதரன்-ஜதீஸ்** (தர்மரத்தினம் ரவிச்சந்திரன்-வாழைச்சேனை-மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், இலங்கை முப்படையினராலும், தேசவிரோதசக்திகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி- 10073)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11-11-1939

உதிர்வு: 21-7-1993

திருமதி இராசமலர் சிவஞானசுந்தரம்
(முன்னாள் ஆசிரியை யா/சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை)
திதி: 09-08-1994

லகம் யாழ்ப்பாணத்தில் வைப்புச்செய்யலாம்.

| வேலையின் விபரம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
| --- | --- | --- |
| காப்புறுதிக் கூட்டுத்தாபன அடிக்கூரை (சீலிங்) திருத்தவேலை. | 100/- | 250/- |

கேள்வி ஆவணங்களை பரிபாலனக்கிளை, செயலகம் யாழ்ப்பாணத்தில் இலவசமாக பார்வையிடலாம்.

ஒப்பம்/ கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
21-07-94

(சி-10077)



லெப். கோபால்/ உலகன்

(மாணிக்கம்பிள்ளை பன்னீர்ச்செல்வன்)

அவர்களது 31-ம்நாள் நினைவுகூரல் வைபவம் எதிர்வரும் 13-08-94 சனிக்கிழமை நடைபெறும் இந்நிகழ்வில் அன்றைய தினம் சகபோராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

''தியாக சீலம்''

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

- குடும்பத்தினர்.

(9061)

பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை)

திதி: 09-08-1994

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அன்பினை சொரிந்து அறிவினை புகட்டி எனை வளர்த்து ''கண்ணா கண்ணா'' என்று செல்லமாக அழைத்த குரல் ஓய்ந்து விட்டதே அம்மா! இனி எப்பிறவியில் அம்மா உனை காண்பேன்? ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதில் அணையாத தீபமாய் இருக்கும் அம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புமகள்: சிவஜினி,
கணவர்; சிவஞானசுந்தரம்,
சகோதரி - பாக்கியலட்சுமி
மைத்துனர்- சண்முகராசா
உற்றார், உறவினர்கள்.

தும்பளை,
பருத்தித்துறை.

(சி-10074)


# இன்னும் சில நாட்களில்....

★ தமிழோசை
★ இது எங்கள் தேசம்
★ தாயகக் கனவு
★ சின்ன விழிகள்

போன்ற வெற்றிப் படைப்புகள் வரிசையில்

பொ. தாசனின்

# இன்னும் ஒரு நாடு

பாடல்:
புதுவை இரத்தினதுரை
இசை:
முரளி
பாடியவர்கள்:
சாந்தன், சுகுமார்
தயாரிப்பு:
முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்

(சி-10075)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# தமிழீழ பொதுக்கல்வி தேர்வு வழிகாட்டி

## கணிதம்

முன்னைய தொடரில் பகுதி I இற்கான வினாத் தாள்அமைப்புப் பற்றியும், விடையெழுதும் முறை பற்றியும் ஆராய்ந்தோம். பகுதி II இல் 1 ஆவது வினா பற்றி உதாரணத்துடன் பார்த்தோம். பகுதி II இல் ஏனைய வினாக்கள் பற்றி இப்பகுதியிலே ஆராய் வோம்.

### வினா 2: சுட்டிகளும், மடக்கைகளும்

பகுதி II இல் 2 ஆவது வினா சுட்டிகளும், மடக் கைகளும் என்ற பகுதியை உள்ளடக்கியதாக அமை கின்றது. அ, ஆ, இ என 3 பகுதிகளை உள்ளடக்கி யது.

(அ) பகுதி சுட்டி சம்பந்தமான வினாஇதற்கு 3 புள்ளி களும்

(ஆ) பகுதி மடக்கைவாய்ப்பாட்டை உபயோகிக்காது பெறுமதி காணல் இதற்கு 3 புள்ளிகளும்

(இ) பகுதி மடக்கை வாய்ப்பாட்டை உபயோகித்துப் பெறுமதி காணல் இதற்கு 8 புள்ளிகளும் வழங்கப் படுகின்றன.

பொதுவாக தேர்வுநாடிகள் இவ்வினாவை தெரிவு செய்வதன் மூலம் இலகுவாகப் புள்ளிகளைச் சேகரிக்க முடியும். மாணவர்கள் கடந்த கால பரீட்சை வினாத் தாளை நன்கு ஆராய்வார்களாயின் இவ் 2ஆவது வினாவின் மாதிரி மாறாமல் இருந்து வருவதை அவ தானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கடந்தகால பரீட் சை வினாத்தாளை அடிப்படையாகக்கொண்டு சில உதாரணங்களைப் பார்ப்போம்.

(அ) சுட்டிகள்

★ சுட்டிக் கணக்குகளை சுருக்கும்போது இறுதி விடையை எளிய வடிவமாகக் கொடுத்தல் நன்று.

★ விடையை நேர்சுட்டியிலே கொடுத்தல்வேண்டும்.

உ+ம் 1: $\left[\frac{4a^{-2}}{9x^2}\right]^{-\frac{1}{2}}$ என்பதைச் சுருக்கி விடையை நேர்ச் சுட்டியாகத் தருக.

$$\frac{(2^2)^{-\frac{1}{2}} \times (a^{-2})^{-\frac{1}{2}}}{(3^2)^{-\frac{1}{2}} \times (x^2)^{-\frac{1}{2}}}$$

$$= \frac{3ax}{2}$$

உ+ம்2; $2^3 \times 4^x = 2^7$ என்பதில் x இன் பெறு மதியைக் காண்க.

$$2^3 \times 2^{2x} = 2^7$$
$$3 + 2x = 7$$
$$2x = 4$$
$$x = 2$$

(ஆ) மடக்கை வாய்ப்பாட்டை உபயோகிக் காது பெறுமதி காணல்

★ மடக்கை விதிகளை உபயோகிக்க வேண்டும். (மடக்கை அடிகள் சமனாக இருந்துகூட்டும்போது மடக்கை எண் பெருக்கப்படும். கழிக்கும் போது வகுக்கப்படும்)

★ மடக்கை அடிகள்இடப்படாவிட்டால் அதுபொது மடக்கையாகக் கருதப்படும். (10ஐ அடியாகக் கொண்ட மடக்கையே பொது மடக்கை ஆகும்)

உ+ம் 1; $\text{மட}_{10}\left(\frac{625}{7}\right) - \text{மட}_{10}125 + \text{மட}_{10}(35\times4)$

$$= \text{மட}_{10}\left[\frac{625\times35\times4}{7\times125}\right]$$

$$= \text{மட}_{10}100$$

O/L $\text{மட}\,x^3 = \text{மட}\left[\frac{81\times4}{96}\right]$

$$x^3 = \frac{27}{8}$$
$$x^3 = \left(\frac{3}{2}\right)^3$$
$$x = \frac{3}{2}$$
$$x = 1\tfrac{1}{2}$$

உ+ம் 3;

$\text{மட}_{10}2 = 0.3010$, $\text{மட}_{10}3 = 0.4771$ ஆயின் $\text{மட}_{10}15$ இன் பெறுமதியைக் காண்க.

$$\text{மட}_{10}5 = \text{மட}_{10}\left(\frac{10}{2}\right)$$
$$= 1 - 0.3010$$
$$= 0.6990$$
$$\therefore \text{மட}_{10}15 = \text{மட}_{10}(3\times5)$$
$$= 0.4771 + 0.6990$$
$$= 1.1761$$

(இ) மடக்கை வாய்பாட்டை உபயோகித் துப் பெறுமதி காணல்

2ஆவது வினாவுக்கு வழங்கப்படும் புள்ளிகளில் அரைவாசிக்கு மேற்பட்ட புள்ளிகள் மடக்கை வாய்ப் பாட்டை உபயோகித்துப் பெறுமதி காணல் வினாவி ற்கு வழங்கப்படுகின்றது. மடக்கை வாய்பாட்டை உப யோகித்துச் செய்யும் இவ் வினாவை பூரணமாகச் செய்து முடிக்காவிட்டாலும் ஒவ்வொரு செயற்பாட் டிற்கும் படிமுறைப்புள்ளிகள் வழங்கப்படும். அதாவது ஒரு எண்ணிற்கு மடக்கை பார்த்தல், பெருக்கல், வகு த்தல், கூட்டல், கழித்தல் போன்ற ஒவ்வொரு செய் கைக்கும் புள்ளிகள் வழங்கப்படுவதை புள்ளியிடல் திட் டம் காட்டுகின்றது. எனவே மடக்கை கணக்கொன்றை

ல. சதீஸ்குமார்
ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

பூரணமாக முடிக்கமுடியாவிட்டாலும் மேற்குறிப் பிட்ட படிமுறைப் புள்ளிகளையாவது பெற முயற்சி செய்தல் வேண்டும். எண், நியமவடிவம், மடக்கை எனும் ஒழுங்கிலே கணக்கை செய்யவேண்டுமென்ற அவசியமில்லை.

★ ஒரு எண்ணிற்கு மடக்கை பார்க்கும் போது அவ் எண்ணை சரியான நியமவடிவத்திற்கு கொண்டு வந்து மடக்கை பார்த்தல் வேண்டும்.

★ ''பார்'' பெறுமானங்களுக்கான கூட்டல், கழி த்தல், பெருக்கல், வகுத்தல் வரும்போது மிகு ந்த அவதானமாகச் செய்தல் வேண்டும். இவ் விடயங்களைக் கருத்திலே கொண்டு மடக்கை யிலே பயிற்சி எடுப்பீர்களாயின் இவ் வினாவை இலகுவாகச் செய்யக் கூடியதாக அமையும்.

உ+ம் 1 : $\frac{6.783\times(0.750)^2}{\sqrt[3]{2.012}}$ என்பதை மடக்கை வாய்ப்பாட்டை உபயோகித்துப் பெறுமதி காண்க.

$$= \frac{10^{8314} \times 10^2\times \bar{1}^{.8751}}{10^{\frac{1}{3}\times 0.3036}}$$

$$= \frac{10^{0.8314} \times 10^{\bar{1}.7502}}{10^{0.1011}}$$

$$= 10^{(0.8314 + \bar{1}.7502 - 0.1011)}$$
$$= 10^{0.4805}$$
$$= 3.023$$

சில சந்தர்ப்பங்களில் சூத்திரங்கள் ஏதாவது தர

$$T = 2\pi\sqrt{\frac{l}{g}}$$

$$= 2\times3.142 \times \sqrt{\frac{127.3}{981}}$$

$$= 6.284 \times \sqrt{\frac{127.3}{981}}$$

$$= 10^{0.7983} \times \frac{10^{\frac{1}{2}\times 2.1048}}{10^{\frac{1}{2}\times 2.9917}}$$

$$= 10^{0.7983} \times \frac{10^{1.0524}}{10^{1.4958}}$$

$$= 10^{(0.7983 + \bar{1}.5566)}$$
$$= 10^{0.3549}$$
$$= 2.264$$

### வினா 3: தொடையும், நிகழ்தகவும்

தொடை அல்லது நிகழ்தகவு அல்லது தொடை யும் நிகழ்தகவும் சேர்ந்த வினாஒன்று வந்து கொண் டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. மாணவர்கள் இவ் வினாவிற்கு விடையளிக்கும் போது தெளிவாக வாசித்து நன்கு விளங்கிய பின் விடையளிக்க வேண்டும்.

தொடை

தொடை சம்பந்தப்பட்ட வினாவை கருதுவோ மாயின் மாணவர்கள் இவ் வினாவிலே கூறப்பட்ட வசன அமைப்பின் கருத்தை விளங்கி அதற்குரிய தொடைகளைக் குறித்தல் வேண்டும். சுருக்கமாகக் கூறின் மாணவர்கள் இதில் கூறப்பட்ட தமிழ்ச்சொற் களின் கருத்துக்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும் உதாரணமாகசில வினாக்களில் தரப்படும்ஓரிரு தரவு களின் தமிழ்க் கருத்துக்களை ஆராய்வோம்.

(1) கணிதம் விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்க ளிலே பரீட்சை நடைபெறுகின்றது எனக் கருதுவோம். இங்கு கணிதமும் விஞ்ஞானமும் சித்திய டைந்த 8 பேர் தமிழில் சித்தியடையவில்லை எனும் ஒரு தரவு தரப்பட்டுள்ளது. மேலுள்ள தரவிலே அவ் 8 பேரும் கணிதமும் விஞ்ஞானமும் மட்டுமே சித்தி யடைந்துள்ளனர் என்பதே கருத்தாகும். இங்கு மட் டும் எனும் சொல் மறைந்து வந்துள்ளது. இதே போல் கணித பாடத்தில் சித்திபெற்ற 2 பேர் மற் றைய இரு பாடங்களிலும் தவறினர் என்றால் அவ் இருவரும் கணிதம் மட்டுமே சித்தியடைந்துள்ளனர் என்பது கருத்தாகும்.

(2) ஒரு கூட்டுறவுக் கடையில் அரிசி, மா, சீனி மட்டும் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படு கின்றது எனக் கொள்வோம். இங்கு ஒரு தரவாக அரிசி வாங்கிய யாவரும் மாவும் சீனியும் வாங்கினர் என்றால் அவர்கள் அரிசி, மா, சீனி ஆகிய மூன்றை யும் வாங்குகிறார்கள் என்பதாகும். இங்கு அரிசி மட் டும், அரிசியும் மாவும் மட்டும், அரிசியும் சீனியும் மட் டும் என்பன வெறுந்தொடைகளாக அமையும்.

(3) A,B,C எனும் செய்தித்தாள்களை வாங்கி யோர் விபரம் தரப்படுகின்றது. இதில் ஒரு தரவாக A எனும் செய்தித் தாளை வாங்கியோர் B,C என்பவற்றில் ஒன்றையேனும் வாங்குகிறார்கள் எனத்தரப்படுகின்றது. இதன் விளக்கம் A எனும் செய்தித்தாளை மட்டும் எவரும் வாங்கவில்லை. A மட்டும் எனும் தொடை வெறுந்தொடையாக அமை யும். வெறுந்தொடையைக் குறிப்பதற்கு O எனக் குறிப்பது தவறாகும். அத்தொடையை வெறுமை யாக விடுதல் வேண்டும்.

(4) சன்லைட்டு வாங்கிய யாவரும் லக்ஸ் வாங்கி னார்கள் எனும் தரவு ஒன்று தரப்பட்டுள்ளது எனக் கருதினால் இங்கு லக்ஸ் வாங்கியோரின் உப தொடையாக சன்லைட் வாங்கியோர் வருவர்.

இவ்விதமான தமிழ்ச் சொற்களின் கருத்துக் களை அவதானித்தால் தொடைக் கணக்குகளை இல குவாகச் செய்து முடிக்கலாம்.

நிகழ்தகவு

நிகழ்தகவு சம்பந்தமான வினாவையும் அவதான மாக வாசித்து கருத்தை விளங்கிய பின்னர் செய்தல் வேண்டும்.

## மாணவர் அரங்கு

ளில் கனவடிவக் கறுப்புத்தாயக்கட்டை ஒன்றும், வெள்ளைத் தாயக்கட்டை ஒன்றும் ஒருமித்து உருட் டப்படுகின்றன. தாயக்கட்டை ஒவ்வொன்றிலும் எதிர்முகச் சோடிகள் 1,2,3 எனத் தரப்பட்டுள்ளது. இங்கு புள்ளிவரைபினைக் குறிக்கும் போது கறுப் புத்தாயக்கட்டையில் 1, 2, 3, 1, 2, 3 எனவும் வெ ள்ளைத்தாயக்கட்டையில் 1, 2, 3, 1, 2, 3 எனக் குறிக்க வேண்டும். வழமையான சதுரமுகித்தாயக் கட்டையைத் கருதி 1, 2, 3, 4, 5, 6 எனக்குறித்தல் தவறாகும்.

தொடை, நிகழ்தகவு சம்பந்தப்பட்ட வினா வை வாசித்து விளங்கினால் இலகுவாகச் செய்யக் கூடியதாக அமையும்.

### வினா 4: வரைபு

மாணவர்கள் பரீட்சை வினாத்தாள்களில் சில வற்றை செய்து பார்ப்பார்களாயின் வரைபுக்கணக் கை செய்து முடிக்கக் கூடியதாக அமையும். அட்ட வணையைத் தயார் செய்து வரைபை அளவுத்திட்ட அடிப்படையிலே வரைவார்களாயின் 6 புள்ளிக ளைப் பெற்றுவிடலாம். பின் இழிவு அல்லது உயர் வுப்பெறுமதி, சமச்சீர்கோட்டின் சமன்பாடு போன்ற வினாக்கள் அமையும். இதிலே இரு வினாக்களுக்கு விடையளித்தால் கிட்டத்தட்ட 8 புள்ளிகளைப்பெ றும் வாய்ப்பைப் பெற்றுவிடுவர். சில மாணவர்கள் ஒரு வினாவிலே ஓரிரு பகுதிகளை செய்ய முடிய வில்லையே என்று அவ்வினாவை எடுப்பதே இல்லை. ஒவ்வொரு பகுதிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படுகின் றது என்பதைக் கருத்திலே கொண்டு விடையளிக்க வேண்டும். வரைபிலே நன்கு பயிற்சி எடுப்பீர்களா யின் நிச்சயமாக இவ்வினாவை செய்து முடிக்க முடி யும். மெல்லக்கற்போர் கூட இவ்வினாவிலே இலகு வாகப் புள்ளிகளைப் பெறலாம்.

1) வரைபு வினாவிலே X இனது Y இனது பெறு மதிகளைக் கொண்ட அட்டவணை தரப்படும். இங்கு Y இன் பெறுமதிகள் சில வெறுமையாக இருக்கும். இப்பெறுமதிகளைப் பிரதியிடுவதின் மூலம் காணல் வேண்டும். பிரதியீட்டுக்கான செய்கை வழிகள் காட்டப்படல் வேண்டும்.

உ+ம் ; x = (-2) ஆகும்போது

$$Y = 4+2x-x^2$$
$$= 4+2x-2-(-2)^2$$
$$= 4-4-4$$
$$= 4-8$$
$$Y = (-4)$$

2) சில சந்தர்ப்பங்களிலே சமன்பாட்டை நிறைவர்க்கமாகத் தந்தால் அச்சமன்பாட்டை விரித்து எழுதாமல் அப்படியே வைத்து பிரதியிடலாம். தசம தானங்களில் தரப்படும் பெறுமதியை பின்னமாக்கிப் பிரதியிட்டால் இலகுவாகச் செய்து விடலாம்.

உ+ம் : x = 1.5 ஆகும்போது இங்கு 1.5 ஐ $1\frac{1}{2}$ என லாம்.

$$Y = 6\tfrac{1}{4} - \left(x - \frac{3}{2}\right)^2$$
$$= 6\tfrac{1}{4} - \left(1\tfrac{1}{2} - \frac{3}{2}\right)^2$$
$$= 6\tfrac{1}{4} - \left(\frac{3}{2} - \frac{3}{2}\right)^2$$
$$= 6\tfrac{1}{4}$$

★ அளவுத் திட்டம் தரப்படுமாயின் அவ் அளவுத் திட்டத்திற்கேற்ப ஒப்பமான வரைபை வரைதல் வேண்டும். அளவுத் திட்டம் தரப்படாவிட்டால் நீங் களே அளவுத் திட்டத்தை எடுத்தல் வேண்டும்.

$$= \text{மட}_{10}\left[\frac{625 \times 35 \times 4}{7 \times 125}\right]$$

$$= \text{மட}_{10}\,100$$

$$= 2$$

உ+ம் 2:

$3\,\text{மட}\,x + \text{மட}\,96 = 2\,\text{மட}\,9 + \text{மட}\,4$ என்பதிலே x இன் பெறுமதியைக் காண்க.

$3\,\text{மட}\,x + \text{மட}\,96 = 2\,\text{மட}\,9 + \text{மட}\,4$

$\text{மட}\,x^{3} = \text{மட}\,9^{2} + \text{மட}\,4 - \text{மட}\,96$

$$100^{\,1011}$$

$$= 10^{(0.8314 + \bar{1}.7502 - 0.1011)}$$

$$= 10^{0.4805}$$

$$= 3.023$$

சில சந்தர்ப்பங்களில் சூத்திரங்கள் ஏதாவது தரப்படின் அச்சூத்திரங்களின் தெரியாக் கணிய உறுப்புக்களின் பெறுமதிகளைப் பிரதியிட்டு பின் வழமையான முறையிலே மடக்கை காணல் வேண்டும்.

உ+ம் 2: $T = 2\pi\sqrt{\frac{l}{g}}$ எனும் வாய்ப்பாட்டில்

$\pi = 3,142 \quad l = 127.3 \quad g = 981$ எனின்

T இன் பெறுமதியைக் காண்க.

நிகழ்தகவு

நிகழ்தகவு சம்பந்தமான வினாவையும் அவதானமாக வாசித்து கருத்தை விளங்கிய பின்னர் செய்தல் வேண்டும்.

★ கணக்கை நன்கு வாசித்து பிரதி வைப்பு உள்ளதா? அல்லது பிரதி வைப்பு இல்லையா? என அறிந்த பின் அதற்கேற்ற வகையிலே புள்ளிவரைபிலோ அல்லது மரவரிப்படத்திலோ வினவப்பட்டதற்கேற்ப விடையளிக்கத் தொடங்க வேண்டும்.

★ சில சந்தர்ப்பங்களிலே வினாவை வாசிக்கும் போது தவறுகள் ஏற்படச் சந்தர்ப்பமுண்டு. உதாரணமாக 1993ஆம் ஆண்டு பரீட்சை வினாத்தா

$$= 6\tfrac{1}{4}$$

★ அளவுத் திட்டம் தரப்படுமாயின் அவ் அளவுத் திட்டத்திற்கேற்ப ஒப்பமான வரைபை வரைதல் வேண்டும். அளவுத் திட்டம் தரப்படாவிட்டால் நீங்களே அளவுத் திட்டத்தை எடுத்தல் வேண்டும். அளவுத்திட்டத்தை எடுக்கும் போது பெரிய அளவிடையாக எடுத்தல் நன்று.

★ வரைபை வரையும்போது திரும்பல் புள்ளி இல்லாவிடின் அதைக் கண்டே வரைபைத் திருப்புதல் வேண்டும்.

★ வரைபைத் தெளிவாக வரையுங்கள்.

(தொடரும்)

# விஞ்ஞானம் O/L

க. பொ. த (சா.த), க. பொ.த (உ.த) பொதுப் பரீட்சைகளுக்கு வருடா வருடம் ஆயிரக்கணக்கான மாணவர் தோற்றுகின்றனர். தேர்வு மண்டபத்தை விட்டு வெளியேறியதும் மாணவர்கள் தமக்குள் எழுதிய விடைகள் பற்றிக் கலந்துரையாடுவது வழக்கம். பின்வரும் வசனங்களை நாம் கேட்கின்றோம்; ''அதுவா விடை; அப்ப எனக்குச் சரி''. ''அந்தக் கேள்வியோடை நேரத்தைச் செலவிட்டபடியால் இரண்டு சுகமான கேள்விகளுக்கு விடை எழுத ''நேரம் காணாமல் போச்சு'' அடடே அந்தக் கேள்வியிலே பிழையானது என்ற சொல்லைக் கவனிக்கவில்லை. சரியான கூற்றுக்கு அடையாளமிட்டுப் போட்டேன்'' இவ்வாறு பலவிதமான வசனங்களைக் கேட்கின்றோம். பெறுபேறுகள் வந்ததும் மீண்டும் அதிர்ச்சி. 'D' எதிர்பார்த்தவருக்கு 'C' யும் இறுதி விடைகள் எடுக்க முடியவில்லை என்றவர் 'C' எடுப்பதும் கண்கூடு. ஏன் இந்த நிலை? சரியான இறுதி விடை இருந்தால் மட்டும் போதுமானதல்ல. சரியான அணுகுமுறையும், செய்முறைப்படிகளும் அவசியம். இறுதிவிடை எடுக்காவிடினும் சரியான செய்கை முறையை மேற்கொண்டமையினால் நல்ல பெறுபேறு கிடைப்பதுமுண்டு. எனவே நாம் வினாத்தாளிலுள்ள வினாக்களைஎங்ஙனம் அணுக வேண்டும்? எவ்வாறு விடையளிக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுதல் நன்மை பயக்கும். இங்கு விஞ்ஞான பாடத்தைப் பற்றிச் சிந்திப்போம். தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு வினாக்களை உதாரணமாகக்காட்டி சில விடயங்கள் விளக்கப்படும். முதலில் பகுதி I வினாத்தாளை எடுத்துக் கொள்வோம்:

பல் தேர்வு வினாக்களைக் கொண்டது பகுதி I வினாத்தாள் 40 வினாக்கள்தரப்பட்டிருக்கும். விடையெழுதும் தாளில் ஒவ்வொருவினாவுக்குமுரிய பொருத்தமான கூட்டில் புள்ளடியிடுதல் வேண்டும். ஆண்டு 6 தொடக்கம் 11 வரை பகுதி I வினாத்தாள்கள் பலவற்றிற்கு விடையளித்தபின்னரும் சரியான முறையில் புள்ளடியிடத்தெரியாது இருக்கும் மாணவர் பலர்.

10. | 1 | 2 | 3 | 4 |

எனஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். வினா 10 இற்குரிய விடை (3) எனின்

3

| 1 | 2 | X | 4 | எனக் கொடுக்கப்பட்டால் மூன்றின்மேல் புள்ளடியிடுதல் வேண்டும் கருமையான பென்சிலால் வட்டத்தின் மையத்தில் கோடுகள் சந்திக்கும் வண்ணம், வட்டத்தை முழுதாக வெட்டத்தக்கதாக புள்ளடியிடல் வேண்டும். வட்டத்தின் கீழ் கோடிடுதல், வட்டத்தை நிரப்பித் தேய்த்து விடுதல், வட்டத்திற்குள் மிகச்சிறிய புள்ளடியிடுதல், துலக்கமற்ற புள்ளடி போன்றவை பெறுபேற்றைப் பாதிக்கும்.

தவறான ஒரு விடைக்குப் புள்ளடியிட்ட பின் திருத்துவது எப்படி? தவறான புள்ளடிக்குக் குறுக்காக 2 அல்லது 3 சமாந்தரக் கோடுகளால் வெட்டிவிடுக. பின்னர் சரியான இலக்க வட்டத்தில் புள்ளடி இடுக.

புள்ளடியை அழித்தல் விரும்பத்தக்கதல்ல. ஒரு காரணம் முழுமையாக அழிப்பதற்கு நேரம் எடுக்கிறது. பயனுள்ள செக்கன்கள் விரயமாகின்றன. அடுத்தது. முழுமையாக அழிக்கப்படாது புள்ளடி ஓரளவிற்குத் தெரியுமாயினும் மதிப்பிடுபவரினால் அது இரண்டாவது புள்ளடி எனவும் கொள்ளப்பட்டு புள்ளி எதுவும் வழங்கப்படாது போகலாம். கடந்த தேர்வுகளில் இவ்வாறாகப் பலர் பாதிக்கப்பட்டது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே திருத்தப்பட்ட சரியான விடைக்கும் புள்ளிகிடைக்காதுபோகலாம்

2. க. பொ. த. [சா.த.] தேர்வில் 40 வினாக்கள் 1 மணித்தியாலத்தில் விடையளிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் சம அளவு நேரம் தேவைப்படுவதில்லை. எனினும் சராசரியாக ஒரு வினாவிற்கு $1\frac{1}{2}$ நிமிடம் செலவிடலாம் என்பதை மனதிற் கொள்ளுதல் உதவியாக இருக்கும்.

3. இப்பகுதியில் ஒவ்வொரு வினாவிற்கும் 01 புள்ளி வழங்கப்படுகிறது. மொத்தப் புள்ளிகள் 40 ஆகும். பகுதி II இற்கு 120 புள்ளிகளுக்கு புள்ளியிடப்படும் பகுதி II இல் பெற்றபுள்ளியை இரண்டால் வகுத்து பகுதி I இன் புள்ளிகளுடன் சேர்த்து இறுதிப்புள்ளி

**அசோகன்**

வழங்கப்படும் பகுதி I இல் பெறும் புள்ளிகள் கூடிய 'நிறை' உடையவை என்பது உணரப்படவேண்டும்.

பகுதி I இல் 25 'சரி' எடுத்தவர் 25 புள்ளிகள் பெறுகின்றார். இவர் பகுதி II இல் 120 இற்கு 100 புள்ளிகள் பெற்றால் தான் 75% பெற முடியும். அடுத்து பகுதி I வினாத்தாள் பற்றிச் சிந்திப்போம்.

1. ஒவ்வொரு வினாவிற்குமுரிய 'தண்டு'- வினாவின் தரவு/ விளக்கம் மிக முக்கியமானது. மிக உன்னிப்பாக கவனித்து வாசிக்க வேண்டும். சில வினாக்களில் உள்ள 'மட்டும்', 'எப்போதும்' 'தவறானது', போன்ற ஒருசொல்லே விடையைத் தீர்மானிப்பது ஆகும். தண்டை வாசிக்கும் போது இச் சொற்களுக்கு மிகக்கூடிய முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். உதாரணமாக பின்வரும் வினாவைப் பார்ப்போம்.

40. சந்திரனுக்கு வளிமண்டலம் இல்லை எனக் கூறப்படுகிறது. பின்வருவனவற்றுள் எது இக் கூற்றுக்கு அமைவாக இல்லாதது?

1] சந்திரப்பகலின் வெப்பநிலை சந்திரஇரவின் வெப்பநிலையிலும் பன்மடங்கு அதிகமாகும்.

2] சந்திரனிலிருந்து பார்க்கும் போது வானம் கறுப்பாக உள்ளது

3] பூமியில் 2 m உயரப் பாயும் ஒருவர் சந்திரனில் 12m உயரப்பாய முடியும்.

4] சந்திரத்தரை முழுவதும் விண்கற்கள் மோதியதால் உண்டான அடையாளங்கள் காணப்படுகின்றன.

இங்கு தரப்பட்ட நாலு விடைகளும் ஏதோ ஒரு வகையில் விஞ்ஞான ரீதியில் உண்மையானவை வினாவின் தண்டில் காணப்படும் இல்லாதது என்ற சொல்லே முக்கியமானது. இதன் அடிப்படையில் 3) ஆவது விடையே அடையாளமிடப்பட வேண்டியது. விடைத்தாள்களை மதிப்பிட்ட போது 26%- விடை [1], 22% - விடை [2], 16% - விடை [3] 36% - விடை [4] என விடையளித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

2] இப்பகுதியில் எந்த ஒரு வினாவிற்கும் விடையளிக்க முன் தரப்பட்ட நான்குவிடைகளையும் வாசிக்க வேண்டும் அதன் பின்னரேசரியானதை/ பொருத்தமானதைத் தெரிவு செய்ய வேண்டும். சிலவினாக்களில் சரியான விடைகள் தரப்பட்டிருக்கும். அவற்றில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்ய வேண்டும் எடுத்துக்காட்டாக பின்வரும் வினாவைப் பார்ப்போம்.

இரசம் பாரமானித்திரவமாகப் பயன்படுத்தப்படுவதற்கான காரணம்:

(1) ஒளி புகவிடாது (2) கண்ணாடியில் ஒட்டாதது.

(3) இலகுவில் ஆவியாகாதது (4) அடர்த்தி மிகக் கூடியது.

இவ்வினாவில் தரப்பட்ட விடைகள் நாலும் இரசம் தொடர்பான சரியான கூற்றுக்கள் எனினும் நாலாவது விடையே மிகப்பொருத்தமானது. இதனையே தெரிவு செய்யவேண்டும். தரப்பட்ட நாலு விடைகளையும் கட்டாயமாக வாசிக்க வேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

ஏதாவது ஒரு வினாவிற்கு விடையளிக்கக் கூடிய நேரம் எடுக்குமெனின் முதல் வாசிப்பின்போது உங்களுக்கு நன்கு தெரிந்த வினாக்களுக்கு விடையளிக்கவும், இரண்டாவது, மூன்றாவது வாசிப்பின் போது கடினமானவற்றைக் கவனித்துக் கொள்ளலாம்.

சில வினாக்கள் கூற்று - காரணம்என்ற வடிவில்அமையலாம். இவ்வினாக்களில் தரப்பட்ட கூற்று ஒரு விஞ்ஞான உண்மையா எனத் தீர்மானிக்க வேண்டும். இதற்குக் காரணமாக அமையக் கூடிய அடுத்த வசனத்தைத் தெரிவு செய்யவேண்டும்.

சில வினாக்கள் உங்களுக்குப் புதிய விடயத்தை உள்ளடக்கியிருக்கும் இவற்றிற்கு சரியான விடையைத் தேர்வது கடினமாக இருக்கலாம். இச்சந்தர்ப்பங்களில் தரப்பட்ட நாலு விடைகளையும் வாசித்து பிழையான பொருத்தமற்ற விடைகளை ஒவ்வொன்றாக நீக்குவதன் மூலம் எஞ்சிய விடையைத் தெரிவு செய்யலாம்

வினாத்தாள் உங்களது விஞ்ஞான மனப்பாங்கைச் சோதிக்கும் வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும் எடுத்துக்காட்டாக:.

''வெளிச்சுவாச வளியில் காபனீரொட்சைட்டுவாயு அதிக அளவில் உண்டு எனக் காட்டுவதற்கு ஒரு மாணவன் தெளிந்த சுண்ணாம்பு நீருக்குள் ஒரு குழாயினூடாக வெளிச்சுவாச வளியைச் செலுத்தினான். நிறமற்ற சுண்ணாம்பு நீர் பால் நிறமாகியது. இச் செயற்பாட்டிலிருந்து மட்டும் நாம் அனுமானிக்கக் கூடியது,

1] வெளிச்சுவாச வளியில் கூடிய அளவு காபனீரொட்சைட்டு உண்டு

2] வெளிச்சுவாச வளியில் காபனீரொட்சைட்டு உண்டு

3] சுவாசத்தின் போது வளியுடன் காபனீரொட்சைட்டு சேர்க்கப்படுகிறது

4] வளியில் காபனீரொட்சைட்டு உண்டு,

இவ்வினாவில் நாம் முன்பு கற்றிருந்த தகவல்களைஅடிப்படையாகக்கொண்டு விடையளிக்க முனைதல் ஆகாது:

(4 ஆம் பக்கம் பார்க்க)

# O\L வரலாறும் சமூகக்கல்வியும் - தேர்வு வழிகாட்டி

ஒரு மாணவன் சிறந்தபெறு பேறுகளைப் பெறுவதற்கு இருகட்டங்களில் உத்திகளைக் கையாள வேண்டியிருக்கின்றது. கற்றல், வெளிப்படுத்தல் என இவற்றைக் குறிப்பிடலாம். விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளல் நிரற்படுத்துதல், ஞாபக குறிப்புகள் அல்லது குறியீடுகளாக்கிக் கொள்ளல், மனதில் பதித்தல்,பயிற்சித்தல் போன்றவை கற்றல் உத்திகளாகும். இவற்றை உரிய இடத்தில் உரிய முறையில் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமே பரீட்சையாகும். கற்றல் உத்திகளைப் போலவே கற்றன வற்றை வெளிப்படுத்துவதிலும் ஆற்றல் காண்பட வேண்டும்.

பரீட்சைகளில் மாணவர் கவனத்திற் கொள்ள வேண்டிய பொது விடயங்களை முதலில் குறிப்பிட்டு வரலாறும் சமூகக்கல்வியும் எனும் பாடம் சம்பந்தமான குறிப்புகளை பின்னர் நோக்குவோம்

(1) பரீட்சை விதிகளை கவனமாக அறிந்திருத்தல் அவசியமானதாகும். வினாக்கள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு வினா பல உப பிரிவுகளுடன் கட்டமைப்பு பெற்றிருக்கும். இவற்றிற்காக இலக்கங்கள், எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும். விடையளிக்கும் போது விடைத்தாளிலும் அதே இலக்க வடிவமும் எழுத்தும் தெளிவாக எழுதப்படல் வேண்டும். உ+ம்: வினா 2 1 அ. ஆ என்றவாறு மாற்றுக் குறிகள் பரீட்சகரை சிரமத்துக்குள்ளாக்குவதுடன் குறிப்பிட்ட விடைத்தாளிற்கு புள்ளியிடுவதில் வெறுப்பையும் ஏற்படுத்தும் கட்டாய வினா கட்டாயமானது, தெரிவுக்கு உரியது அல்ல. இலகுவான வினாவிற்கு முதலில் விடையளிக்க விரும்புவது இயல்பு. எவ்வாறெனினும் வினா இலக்கங்களை தெளிவாக எழுதுவது அசியமாகும்.

(ii) வினாக்களை அவதானமாக வாசித்தல், கேட்கப்படுவது எதுவென நிச்சயப்படுத்தல் அவசியம். வினாவில் முக்கிய சொற்களின் கீழ் கோடிட்டுக் கொள்வதால் அதற்கு போதிய அழுத்தம் கொடுக்கலாம். விவரித்தல், ஆராய்தல், விளக்குதல், விமர்சித்தல் அல்லது ஒப்பிடுதல் போன்றவை வெவ்வேறு அணுகு முறைகள் பற்றியவையாகும். உள்ளதை உள்ளவாறே விரிவாக கூறுதல் விவரித்தலாகும். தொடர்புள்ள பலவற்றை ஒன்றிணைத்து அல்லது பொருத்திக் காட்டுதல் ஆராய்தலாகும். விடயத்தின் மறைபொருளை வெளிக்கொணர்தல் விளக்குதலாகும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் எடுத்துக் காட்டல் விமர்சித்தல் ஆகும்.

(iii) விடயத்தை ஒழுங்குபடுத்துதல். வினாவில் சுட்டப்பட்ட விடயங்களை வேறு பிரித்து நிரற்படுத்துவது அவசியம். முன்னர் கூறிய விடயத்தை திருப்பக் கூறுதல், முரண்படுதல் போன்றவற்றை இதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். எந்தெந்த இடங்களில் புள்ளிவிவரங்கள், வரைபடங்கள், தேசப்படங்கள், உதாரணங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் தீர்மானிக்கவும். விடையின் தரமே முக்கியமானது அல்லாமல் அதன் இடம் நிரப்பும் தன்மை அன்று.

வரலாறும் சமூகக்கல்வியும் என்ற பாடத்தை பொறுத்த வரை இவற்றுக்கு முறையே 2;3 என்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமை நீங்கள் அறிந்த ஒன்றே. பல் தேர்வு வினாக்களிலும் கட்டமைப்பு வினாக்களிலும் இதனைக் காணலாம் வினாத்தாள் ii-ல் முதலாவது வினா சட்டாயமானதாகும். இதற்கான புள்ளிகள் 30. தெரிவுக்குரிய வினாக்கள்ஒவ்வொன்றுக்கும் 18 புள்ளிகள் உரியன.

நல்ல மொழிநடை, தெளிவான எழுத்து, நேர்த்தியான வரைவுகள், பொருத்தமான நிறங்களும் குறியீடுகளும் உயர்ந்த பெறுபேற்றுக்கு துணை செய்யும். தேவையற்ற அலங்காரங்களும் படங்களில் காட்டியவற்றுக்கு திரும்ப வசனங்களில் விவரணங்களும் தேவையற்றனவாகும். எழுதும் நேரத்தைக் குறைப்பதற்கும் விவரணத்தை மிகைப்படுத்துவதற்குமே தேசப்படங்கள் கையாளப்படல்வேண்டும்.

பொருத்தமான மண்,நல்ல காலநிலை, வேறு இடங்களிலும், ஆங்காங்கே பொருளற்ற பதங்களை தவிர்த்துக் கொள்ளவும். அதே வேளை உண்மையற்ற ஆனால் பொதுவாக்கப்பட்ட வாக்கியங்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உ+ம்: பருவக் காற்று ஆசியா அதிக சன அடர்த்தி உள்ள பிரதேசமாகும்.

ஆபிரிக்க நாடுகளில் வாழ்பவர்கள் நீக்கிரோமக்களாவர். விதிவிலக்குகள் உண்டு என்ற உண்மையை மறைக்க முற்படலாகாது.

புள்ளி வழங்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு விளக்குக. விவரிக்குக எனப்பட்ட வினாக்களுக்கு விடைகுறிப்பிடப்பட்டிருப்பின் 02 புள்ளிகளும் விவரித்திருப்பின் 05 புள்ளிகளும் கொடுக்கப்படும்.

உ+ம் வினா: அபிவிருத்தியடைந்த நாடுகளில் விவசாய உற்பத்திகளின் அளவு, உயர் மட்டத்தில் நிலவுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளை விளக்குக.

விடை:- குறிப்பிடுதல்

1. பாரிய அளவிலான பயிர்ச் செய்கை
2. தொழினுட்பங்களைப் பயன்படுத்துதல்
3. நீர் வழங்கற்சேவை விரிவு பெற்றிருத்தல்
4. விளைச்சல் கூடிய இனங்கள் பயிரிடப்படல்
5. இரசாயன உரங்களையும் கிருமி நாசினிகளையும் பயன்படுத்தல் போன்றன.

விவரித்தல் - பாரிய அளவிலான விளைநிலங்களில் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. நிலங்கள் துண்டாடப்படவில்லை. அமெரிக்காவின் கோதுமை வலயம் இதற்கு உதாரணமாகும். இங்கு சராசரியாக ஒரு நிலம் 400 கெக்டேயர் அளவுள்ளதாகும். இந்த அமைப்பு நிலத்தைப் பண்படுத்தவும் இயந்திரங்களை உபயோகிக்கவும் வசதியாக இருக்கின்றது.

மாணவர் ஒரு பொருள்குறிக்கும் பல சொற்களையும் தெரிந்திருப்பது அவசியம் அல்லாதவிடத்து விடயத்தை தெரிந்திருந்தும் விடையளிக்கத் தவறும் நிலை ஏற்படலாம். உ+ம்; 'சுவடு' என மாணவன் அறிந்திருக்க'மலைப்புடைப்பு' எனும சொல் பயன்படுத்தப்படுமிடத்து மாணவன் தடுமாறக்கூடும். பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை - சேனைப் பயிர்ச்செய்கை; வர்த்தக நிலுவை-வர்த்தக மீதி; ஒல்லாந்தர் - டச்சுக்காரர்; வலகம்பா- வட்டகாமினி;உகந்த தொழில் நுட்பம் - பொருத்தமான தொழில் நுட்பம் போன்றவை வினாவை விளங்கிக்கொள்வதற்கு அவசியமானதாகும். அதேவேளை சில சொற்களிடையேஉள்ள வேறுபாடுகளையும் மாணவர் தெரிந்திருக்க வேண்டும். பாரிய கைத்தொழில் வேறு - பாரத் தொழில் வேறு. விவசாயம் - பயிர்ச் செய்கை என்பவை வேறுபட்டவை. குடியடர்த்தி - குடிப்பரம்பல் என்பவற்றினிடையிலான தெளிவு அவசியமாகும்.

புவியியல் பாடப்பரப்பில் அடிப்படை வரையறைகளில் தெளிவு முக்கியமாகும். கோடை என்பது வெப்பப் பருவம் அல்ல. கடகக்கோட்டருகே சூரிய உச்சம் காணப்படும் பருவமே உலகெங்கும் கோடை எனப்படும். இது அவுஸ்திரேலியாவிற்கு குளிரான பருவமாகும். அயன வலயம் வேறு; மத்திய கோட்டு வலயம் வேறு. 10பாகை வடக்கு - 10 பாகை தெற்கு அகலாங்குகளுக்கு இடைப்பட்டது மத்திய கோட்டு வலயமாகும். கடகக் கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடைப்பட்டதே அயனவலயமாகும். இதேபோன்று உப அயனம், மத்திய அகலாங்குகள், உப ஆட்டிக், ஆட்டிக் போன்றவற்றிலும் தெளிவு வேண்டும்.

தேசப்படத்தைப் பொறுத்தவரை பரப்பளவு காணல், தனிஅமைவு காணல், குறுக்குமுகம் வரைதல் போன்றவற்றில் தவறுகள் ஏற்படுவது இயல்பாகவுள்ளது. இவற்றில் அவதானம் அவசியம். ஆற்றின் போக்கு, கிளைநதி இணைத்தல் போன்றனவும் உண்மைத் தன்மையுள்ளவையாதல் வேண்டும். தேசப்படத்தில் குறியீடுகளும், பிரயோகமும் சரியாதல் வேண்டும். உ+ம்: பாலம்வரைதல், வீதிக்கு வழிவிட்டு நதிக்குக் குறுக்கே அமைக்கப்படுவதாகும். வீதி இணைப்பில்லாதவிடத்து தொழிற்சாலை (முக்கிய கட்டிடம்) அமைதல் பொருத்தமற்றதாகும். சாய்வுகள் வழியே நேரிய வீதிகள் அமைப்பதும் தவறானதாகும்.

ஒரு வினாவுக்கு விடையளிக்காமல் விடுவதிலும் பார்க்கத் தவறாக விடையளிப்பது மாணவரின் தெளிவின்மையை மிகைப்படுத்திக் காட்டும். உ+ம் லண்டன் நகரம் எந்த நதிக் கரையில் அமைந்திருக்கின்றது என்ற வினாவுக்கு ரைன் நதி என விடையளித்தால் மாணவருக்கு தேம்ஸ் நதி மட்டுமல்ல, ரைன் நதியும் தெரியாதென்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

நீண்ட பெயர்களை திரும்பத் திரும்ப சொற் தொடராக எழுத வேண்டிய இடங்களில் குறியீடுகளை கையாள்வது தவறாகாது. பௌதிக வாழ்க்கை பண்புச் சுட்டிக்கு PQLI, அபிவிருத்தியடைந்த நாடுகளிற்கு WDC, வளர்முக நாடுகளுக்கு DC; உணவு விவசாய தாபனத்திற்கு FAO போன்றவற்றைப் பயன்படுத்துவதால் இடத்தையும், நேரத்தையும் மீதப்படுத்தலாம். சில விடயங்களை விளக்குவதற்கு வரைபடங்களைக் கையாள்வதும் ஒரு விரும்பத்தகுந்த நுட்பமாகும்.

உ+ம்: நீரியல் வட்டத்தை விளக்குவதற்கு ஆவியாதல், முகிலாதல், காற்றேற்றம் பெறல், ஒடுங்குதல், படிவு வீழ்ச்சியாதல் என்பவற்றை வட்ட ஒழுங்கில் அம்புக்குறிகளால் இணைத்துக் காட்டலாம். வறுமை வட்டம், சூழலியல் அமைப்பு போன்றவற்றையும் இவ்வாறே காட்டலாம்.

நேரத்தை சிக்கனப்படுத்தி வினாக்களுக்கு நேர் விடையளித்தல் பரீட்சை நோக்கில் முக்கியமானவை.

S. சண்முகராசா B.A (Sp), Dip in-Ed
ஆசிரியர்- யாழ் இந்துக்கல்லூரி

## விஞ்ஞானம்

சுவாசம் தொடர்பாக எந்த விதமான அறிவும் இல்லாத ஒரு மாணவன் இப்பரிசோதனை அவதானிப்பிலிருந்து எடுக்கக்கூடிய முடிவே கேட்கப்பட்டுள்ளது. வினாவின் தண்டில் உட்சுவாச வளிபற்றிய தகவல் எதுவும்இல்லை. எனவே விடை (1) பொருத்தமற்றது. இதேபோல் விடை (3) உம் பொருத்தமற்றது. விடை (4) வளியின் கூறுகள் தொடர்பான ஒருகூற்று ஆனால் சுவாசத்துடன் தொடர்பற்றது எனவே பொருத்தமற்றது தெளிந்த சுண்ணாம்பு நீரை பால் நிறமாக்கியதால் விடை (2) தெரிவு செய்யப்படவேண்டும்.

இறுதியாக 40 வினாக்களும் விடையளிக்க வேண்டும். அடிப்படையான விஞ்ஞானக் கருத்துக்களை /உண்மைகளை நன்கு தெரிந்து வைத்திருங்கள் வினாவின் தண்டிலுள்ள ஒவ்வொரு சொல்லிற்கும் முக்கியத்துவம் கொடுத்து வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள். தரப்பட்ட விடைகள்நான்கையும் வாசித்த பின்னரே விடையைத் தெரிவு செய்யுங்கள். விடைக்கு விடை வேறுபடுந் தன்மையைப் புரிந்து கொள்ளுங்கள். வினாக்கள் எதுவும் தவறவிடப்பட்டதா என விடைத்தாளிலிருந்து அறிந்து கொள்ளுங்கள்.

முன்னைய பகுதி I வினாத் தாள்களைப் பயன்படுத்தி தேர்வுக்கு ஆயத்தப் படுத்தும் போது கைக்கொள்ளக்கூடிய பயனுள்ள முறை; ஒரு வினாவிற்குரிய சரியான விடையை அறிவது மட்டும் போதாது. ஏனைய மூன்று விடைகளும் ஏன் பிழையானவைஎனஅறிய முயற்சிக்க வேண்டும்.அதுவே கற்றலுக்கு உறுதுணையாக இருக்கும்.

பகுதி II வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பாகப் பின்னர் பார்ப்போம்.


இதோ!
"ஒரு பவுண்" பெறுமதியான
தங்கப் பதக்கம்
பரிசு
நல்லூர்த் திருவிழாவில் நடைபெறவுள்ள
தமிழீழத்தினை


## வட-கிழக்கு இணைப்பு பற்றி தெளிவான திட்டம் இல்லை

• அநுரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக பொது சன ஐக்கிய முன்னணியிடம் தெளிவானஎந்தவொருகொள்கைத்திட்டமும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்

பட்டுள்ளதாகவும், அதற்கு துணை நிற்பதாகவும் அவர் தொடர்ந்து பேசுகையில் குற்றம் சுமத்தியுள்ளார்.

## சங்காபிஷேகம்

(தொல்புரம்)

சித்தன்கேணி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் அலங்கார உற்சவ நிறைவு நாளான இன்று அஷ்டோத்தரசங்காபிஷேகம் நடைபெறும். (41)

## கூட்டுறவு தின விழாவில்

## யாழ். சிவில் நிர்வாகியாக ஓய்வு பெற்ற படை அதிகாரி

(கொழும்பு)

யாழ்ப்பாணமாவட்டத்தின் சிவில் நிர்வாக அதிகாரியாக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான கேணல் திசாநாயக்கா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 31-ம் திகதியன்று பலாலி கூட்டுப்படைத் தளத்

வத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வா, கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் ஜெயமஹா ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வடபகுதியிலுள்ள இராணுவ, மற்றும் கட

நல்லூர்த் திருவிழாவில் நடைபெறவுள்ள

## தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்

### வினாவிடைப் போட்டி

போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் நீங்களே அந்த தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல சுற்றுக்களாக நடைபெறவுள்ள இப்போட்டியில் சுற்றுக்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு

★ வெற்றிக் கேடயங்கள்
★ பெறுமதிமிக்க பரிசில்கள்
★ சான்றிதழ்களும்

வழங்கப்படும்

தமிழீழத்தின்

★ பௌதீகச் சூழல் ★ வளர்ச்சி
★ பௌதீக வளம் ★ வரலாறு
★ குடித்தொகை ★ அரசியல்
★ பொருளாதார அமைப்பு ★ தமிழீழ சட்டம்

ஆகியன பற்றியதாக கேள்விகள் அமையும்.

**போட்டிக்கான விதிகள்:**

★ 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
★ தமது விண்ணப்பங்களை கல்லூரி அதிபர் அல்லது கிராம சேவை அலுவலர் அல்லது கிராமிய உற்பத்திக்குழுத் தலைவர்களைக் கொண்டு உறுதிப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.
★ விண்ணப்ப முடிவுத் திகதி 15-8-1994
★ விண்ணப்பங்களை

**"தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்"**
**உட்கட்டுமானப்பகுதி**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
**இல. 10, சம்பியன் வீதி,**
**கொக்குவில்.**

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை சகல புத்தக சாலைகள், கிராமிய உற்பத்திக் குழு அலுவலகங்கள், உட்கட்டுமானப்பகுதி ஆகிய இடங்களில் 5/- ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-10066)

---

தெளிவானஎந்தவொருகொள்கைத்திட்டமும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார். தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஆதரவாகவும், மற்றும் சில எதிராகவும் கருத்து வெளியிட்டு வருகின்றன.

ஆட்சியை அமைக்கும் நோக்கத்திற்காக தற்போதைய மாகாண எல்லைகளைக் கூட அக்கட்சி திட்டமிட்டுள்ளது. இதற்காக கிழக்கு மாகாணத்தில் சில இனவாதக் கட்சிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்யப்

## கூட்டுறவு தின விழாவில் ஊழியர்களுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ சங்கம் சர்வதேச 72-வது ஆண்டு கூட்டுறவாளர் தின விழாவை நேற்று முன்தினம் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடாத்தியது.

மேற்படி விழாவில் சங்கத்தின் முது பெரும் கூட்டுறவாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டதோடு கூட்டுறவு தின விழாவை ஒட்டி சங்க மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மேற்படி சங்கத்தின் ஊழியர்களின் சேவையைப் பலரும் பாராட்டியதோடு அவர்களிற்கான இலாபப் பங்கீட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்பட்டது. ஊழியர்களில் நீண்டகாலம் சங்கத்திற்கு சேவையாற்றிய இரு ஊழியர்கள் விசேடவிதமாக தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

(88)

---

க்கா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 31-ம் திகதியன்று பலாலி கூட்டுப்படைத் தளத்தில் சிறிலங்கா பாதுகாப்பு செயலாளர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் போது இந் நியமனம் பற்றி அறிவிக்கப்பட்டது.

இம் மாநாட்டில் இராணு

...க்கது.

அத்துடன் வடபகுதியிலுள்ள இராணுவ, மற்றும் கடற்படை முகாம்களின் உயர் அதிகாரிகளும் வடபகுதிமுகாம்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி இம் மாநாட்டின் போது பேசியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

## மக்கள் வங்கி கிளைகள் மீண்டும் பழைய இடத்திற்கு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி மேலும் இரண்டு கிளை வங்கிகளை அவ்வப் பகுதியில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சங்கானை, பருத்தித்துறை மக்கள் வங்கி கிளைகளே மீண்டும் அவ்வப் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தற்போது மேற்படி வங்கிகள் வேறு கிளைகளுடன் இணைந்து செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கதே.

(88)

## பெயர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக கடந்த யூலை முதலாம் திகதி முதல் நடுத்தர ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நுட்ப சேவை என்பது இலங்கைத் தொழில் நுட்பவியல் சேவை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கமைவாக சம்பளத் திட்டமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## ஆடிப்பூர விசேட பூசைகள்

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் இன்று ஆடிப்பூரம் ஆகும். அதனையொட்டி பல ஆலயங்களிலும், குறிப்பாக அம்மன் ஆலயங்களிலும் விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகள், திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இத்தினத்தில் அனேக அம்மன் ஆலயங்களில் தீர்த்தத் திருவிழாவும், பொங்கல் பூசை வழிபாடுகளும், அன்னதானமும், அம்பாள் வீதிவலம் வருதல் நிகழ்வுகளும் இடம் பெறும்.

சில ஆலயங்களில் சங்காபிஷேகம், விசேஷ பூசை, திவ்ய பிரபந்தபாராயணபூர்த்தியும் நடைபெறும்.

(24)

## ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு மக்கள்வங்கிநிதிஅன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

செயற்கை அவயவங்களை பொருத்தும் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு மக்கள் வங்கி இருபது லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

செயற்கை அவயவங்கள் தேவைப்படும், வசதி குறைந்த பத்துப்பாவனையாளர்களுக்கு இலவசமாக செயற்கை அவயவங்களை பொருத்தும் படியும் மக்கள் வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

(88)

## ஈரற்பெரியகுளத்தில் சாரதி உட்பட மூவர் கைது

(வவுனியா)

வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் வைத்து வடபகுதி நோக்கி வந்த லொறியொன்றின் சாரதி ஒருவர் உட்பட மூவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதனன்று கைது செய்யப்பட்ட இவர்கள் தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டு வந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
11 - 11 - 1939

உதிர்வு:
21 - 07 - 1993

திதி:
09 - 08 - 1994

திருமதி
**இராசமலர் சிவஞானசுந்தரம்**
[முன்னாள் ஆசிரியை யா/ சென்.தோமஸ் றோ. க. பெண் பாடசாலை, பருத்தித்துறை ]

இன் சொல்லால் இனிய பண்பால்
ஈகைச் சிறப்பால் அனைவரையும்
கவர்ந்த அன்புச் சகோதரியே
சேவையே பெரிதெனக் கொண்டாய்
ஓய்வை நீ நினைக்கவில்லை
சேவையில் களைக்கவில்லை
தேவையை நினைத்தோ உன்னை
அழைத்திட்டான் அரனும் அங்கே.

யா/ சென். தோமஸ் றோ. க. பெண் பாடசாலை, பருத்தித்துறை.

அன்புடன் நினைவு கூரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(9059)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

### சிந்தனைக்கு..

மனப்போக்குகளுக்கு ஏற்பவே அவரவர்களுக்கு சகவாசமும் கிட்டுகின்றது.

- பகவான் இராமகிருஷ்ணர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 09-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## யதார்த்தத்திற்குப் புறம்பானது

இம் மாதம் 16 ஆம் திகதி நடைபெறும் சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால், யுத்த நிறுத்தம் உருவாகும், அரசியல் தீர்வு ஒன்று ஏற்படலாம் என மக்களில் ஒரு சாரார் நம்புவதாகத் தெரிகின்றது. இதை வலியுறுத்துமாப் போன்று பொதுஜன ஐக்கிய முன்னணியும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

ஆனால், இது எத்தகைய சாத்தியமானது. எந்தளவு யதார்த்த நிலையைப் பிரதிபலிக்கின்றதுஎன்பது கேள்விக்குரியதே. இக்கேள்விகளுக்கு ஏற்றால் போன்றே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ள கருத்தும் உள்ளது. ''வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்பாக தீர்மானிக்க வேண்டியது பாதுகாப்பு அமைச்சாகும். எனவே பொதுத்தேர்தலில், யார் வெற்றி பெற்றாலும் இது குறித்துப் படை அதிகாரிகள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை.'' என்பதே ஹமில்டனின் கூற்றாகும்.

ஹமில்டனின் இக் கூற்றானது அரசியலில் இராணுவத் தலைமை பெற்று விட்ட புதன்மையின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். ஏனெனில், பாதுகாப்பு அமைச்சு இன்று ஜனாதிபதியின் கைகளில் இருக்கலாம். அத்தோடு முப்படைகளின் தளபதியாக ஜனாதிபதியாக இருக்கலாம். ஆனால், அரசாங்கம் என்ற ரீதியில், புதிதாகத் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்திற்குப் பாதுகாப்பு அமைச்சு கட்டுப்பட்டக வேண்டிய அவசியமில்லை என்ற ஹமில்டனின் கூற்றுத்தான் அபாயகரமானது.

ஆனால், ஹமில்டன் கூறுவது அபாயகரமானதாக இருப்பினும் அதுவேயதார்த்த நிலை என்பது மறுப்பதற்கில்லை அதாவது புதிய பாராளுமன்றம்தெரிவு செய்யப்பட்டாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியோ அன்றி அவரின் கீழ் உள்ள பாதுகாப்பு அமைச்சோ புதிய பாராளுமன்றத்திற்குக் கட்டுப்படப் போவதில்லை என்பது வெளிப்படை.

இதற்கு ஏற்றால் போன்றே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவோ அவரது கட்சியான ஐ. தே. கட்சியோ இனப்பிரச்சினைக்கான தீர்வு அரசியல் தீர்வு பற்றி எதையும் குறிப்பிடவும் இல்லை. இனப்பிரச்சினைக்கு இரா

## இந்தியாவுக்கு எதிரான பிரசாரம் இல்லை

(கொழும்பு)

இம்முறை தேர்தல் பிரசாரங்களில் எக்கட்சியினருமே இந்தியாவிற்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கவில்லை என கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுடனான உறவு சீரடைந்து வருவதையே தென்னிலங்கையில் காணப்படும் இந்நிலைமை காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## தேர்தல் வன்முறைகளுக்கு ஐ.தே.க. காரணமல்ல

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை வழமைக்கு மாறாக சில பகுதிகளில் தேர்தல் தொடர்பான வன்முறைகள் நடைபெறுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகளுக்கு காரணம் ஐ. தே. க. என்பதை மறுத்த அவர், வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று எதிரணியினரே வன்முறையில் ஈடுபட்டதாகவும்குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி திறந்த பொருளாதாரக் கொள்கை தொடரும் என்கிறது. அட்படியானால் எமது கடந்த 17 வருடகால கொள்கை சரியானது என்பதையே அவர்கள் ஏற்றுக் கொள்வதாக அமைகிறது. எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாம் நிலையான அத்திவாரம் அமைத்துள்ளோம் இதை பேணவே மக்கள் விரும்புவர் என ரணில் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைதொடர்பான விவகாரமே இன்னும் அரசியல் கட்சிகளிடையே ஒரு உறுதியற்ற போக்காக உள்ளது கிழக்கில் தேர்தல் நடக்கிறது வடக்கில் பெரும்பாலான பகுதிகளில் தேர்தல் நடக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ. தே. க. கூட்டத்தில் ஹேமா உரையாற்றுவார்

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசா ஐ தே க. தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் இன்று செவ்வாய் உரையாற்றவுள்ளார். முதற்தடவையாக இவரின் பிரசார உரை பதுளையில் இடம்பெறவுள்ளது.

ஐ. தே. க. பிரசாரங்களில் பெருமளவில் கலந்துகொள்ள முடியாது இருக்கிறேன் எனது பிறந்த இடமான பதுளையில் உரையாற்ற இம்முறை தீர்மானித்துள்ளேன் என ஹேமா தெரிவித்துள்ளார்.

## பௌத்ததேரர்தலைமையில் பொ.ஐ.மு.ஆதரவு பிரசாரம்

(கொழும்பு)

பௌத்ததேரர் ஒருவரின் தலைமையிலான ஜனதா மித்ரோ எனும் இடதுசாரி கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்து வருகிறது. இப் பிரசாரத்தில் ஆளும் ஐ. தே. க. கடும் விமர்சனத்திற்குள்ளாவதாக ஏ. எப். பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வீடுவீடாக ஏறி பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்தும் பிரசாரம்போல் ஐ. தே. கவின் பிரசாரம் தீவிரமாக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஹேமா மீது ஐ. தே. க. வஞ்சம் தீர்க்கவில்லை

### கட்சிச் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்ட ரீதியில் ஹேமா பிரேமதாசா மீது வஞ்சம் [illegible] பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார்,

முன்னாள் ஜனாதிபதிக்கு [illegible]

## அரச சார்பு பத்திரிகை மீது தமிழ் ரைம்ஸ் கண்டனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் முன்னர் எழுதிய கடிதம் ஒன்றை தற்போது அரச சார்பு பத்திரிகையான சண்டே ஒப்சேவர் மீள பிரசுரித்து அக்கடிதம் அண்மையில் அஷ்ரப்பினால் எழுதப்பட்டதாக ஒருதோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது. இதன்மூலம் அஷ்ரப்-சந்திரிகா கூட்டை சங்கட நிலைக்கு உள்ளாக்க முயற்சிக்கிறது என்றும் லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ் ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் இராஜநாயகம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பல மாதங்களுக்கு முன் அஷ்ரப் எழுதிய இக்கடிதத்தை தமிழ் ரைம்ஸ் பிரசுரித்தது என்றும் அதை இப்போது சண்டே ஒப்சேவர் பத்திரிகை மீள பிரசுரித்து மக்களை எதிரணி தொடர்பாக குழப்பநிலைக்கு உள்ளாக்க முயற்சிக்கின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பேரினவாதிகளுக்கு எதிராக ஒன்றுபடுவோம் என புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கடிதம் எழுதிவிட்டு தற்போது அவர் சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ளார் என்ற தொனியில் சண்டே ஒப்சேவர் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஒஸியின் பிரசாரகூட்டத்தில் ஹேமா, துலாஞ்சலி

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார மேடையில் முதன்முதலாக நேற்று மாலை திருமதி ஹேமா பிரேமதாசா, இவரின் மகள் துலாஞ்சலி ஜெயக்கொடி ஆகியோர் பிரசன்னமாகியிருந்ததாக பி.பி.சி. சிங்கள சேவை அறிவிப்பாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்,

நேற்று முன்தினம் வாழைத்தோட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கொழும்பு மாவட்ட ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் மக்கள்கட்சிதலைவர் ஒஸி அபேகுணசேகராவை ஆதரித்துநடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இவர்கள் இருவரும் கலந்துகொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று ஒஸி அபேகுணசேகராவின் பிறந்தநாள் என்றும் எனவே தனது கணவரின் மிகவும் நல்ல நண்பனாக ஒஸி இருந்ததனால் அவருக்கு பிறந்தநாள்வாழ்த்துக்களைத் தெரிவிக்க தானும் மகளும் சென்றதாக திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

## கல்விக்கண்காட்சி

யாழ் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்றும், நாளையும் காலை முதல் மாலைவரை நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் தற்பரானந்தனும், சிறப்பு விருந்தினராக சங்கானை மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி த.வலம்புரியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 4 கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு

(வடமராட்சி)

கரவெட்டி மேற்கில் ஒரு கோழிக்குஞ்சு நான்கு கால்களுடன் பிறந்துள்ளது. அந்திராங் கொலனி என்ற இடத்தில் செ. பாக்கியநாதன் என்பவரது வீட்டிலேயே இக்குஞ்சு நான்கு கால்களுடன் காணப்பட்டது. (யோ)

## நற் பழக்க வழக்கங்களை சிறுவயதில்பழக்கவேண்டும்

•பிரதேச செயலர்

சிறுவர்கள் எதிர்காலச் சிற்பிகள். இவர்கள் எதிர்காலத்தில் நற்பிரசைகளாக வளர சிறுவயதிலேயே கல்வி, அன்பு, விட்டுக்கொடுக்கும் தன்மை, பொறுமை தாய்ப்பாசம் என்பனவற்றை அத்திவாரமிட வேண்டும்.

அல்வாய் மெதடிஸ்த திருச்சபை நல்லாயன் சிறுவர் பாடசாலை மூன்றாம் ஆண்டு விளையாட்டு விழா அண்மையில் நல்லாயன் திருச்சபை மைதானத்தில் நடைபெற்ற போது பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலாளர் திரு. செ. ஸ்ரீநிவாசன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது, சிறுவர்கள் மனதில் நல்ல அறிவு, சிந்தனைகள், ஆற்றல்களை ஊட்ட வேண்டும். இது ஒரு பெரிய பொறுப்பான விடயம். இவ்விடயத்தை சிறுவயதிலேயே நாம் கவனம் செலுத்தாது விட்டால் வளரும் இக் குழந்தைகள் தீய வழிகளிலே செல்ல நேரிடும்.

பெற்றோர் இவர்கள் மீது அக்கறை கொண்டு எதிர்காலத்தில் நற்பிரசைகளாக உருவாக்க முற்படவேண்டும். இன்றைய நிலையில் சிறுவர்கள் மத்தியில் நல்ல போஷாக்கு தன்மை அதிகரிக்க வேண்டும். பாலர்கள் மட்டுமல்ல தாய்மாரும் போஷாக்கில் கவனம் எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் போஷாக்கு குறைவினால் பலவிதமான பாதிப்புக்கள் பல்வேறு வகையினாலும் காணப்பட்டுள்ளன. இந்த போஷாக்கு குறைவினால் மூளை உடல் வளர்ச்சி குன்றிவருகிறது. சிறுவர்கள் தாய்மார், வயோதிபர்கள் ரீதியாக போஷாக்குக் கருத்தரங்குகளை ஏற்படுத்த வேண்டும். இந்த பாடசாலை மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்தவர்களாகத் திகழ்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

பெற்றோர் ஆசிரியர்கள் சிறுவர்கள் மத்தியில் நல்ல பழக்க வழக்கங்களையும் கைக்கொள்ளல் அவசியம் என்றார். மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர் சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

யும் குறிப்பிடவும் இல்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே முடிந்த முடிவு என்ற நிலைப்பாட்டிலேயே டி. பி. உள்ளார். தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதனை அவர்கள் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

அதற்குப் பிற்பாடு தேர்தல் மேடைகளிலும் ஜனாதிபதி டி. பி. இது குறித்துப் பேசியுள்ளதோடு, பாராளுமன்றத் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், தம்மிடமே அதிகாரங்கள் உள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டத்தவறவில்லை, அதிலும் குறிப்பாக, முப்படைகளினதும், பொலிசாரினதும் அதிகாரம் தம்கையில் உள்ளதை அவர் தெளிவாகவே தெரிவித்துள்ளார்.

இதற்கும் மேலாக சிறிலங்காவின் முப்படைகளின் தலைமையும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு எத்தகைய தூரம் அனுமதிப்பார்கள் என்பதே கேள்வியாகும். ஏனெனில், ஆயுதப்படைகளின் உயர் அதிகாரிகள் யுத்தத்தின் காரணமாக ஏற்கனவே பெரும் செல்வம் சேர்த்துவிட்டார்கள். ஒவ்வொருமுறை ஆயுதக்கொள்வனவின் போதும் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும், ஆயுதப்படைகளின் உயர் அதிகாரிகளும் பெருமளவில் தரகுப்பணம், லஞ்சம் பெறுவதாக ஏற்கனவே தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந் நிலையில் யுத்தம் நிறுத்தப்படுவதென்பதோ, அரசியல் தீர்வு ஏற்படுவதென்பதோ அவர்களைப் பொறுத்து பெருத்த நட்டமே ஆகும். இந்நிலையில் இவர்கள் யுத்த நிறுத்தத்தையும் அரசியற் தீர்வையும் ஆதரவளிக்கப்போவதோ, அன்றி விரும்பப் போவதோ இல்லை.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டாலும் அரசியல் தீர்வோ அன்றி யுத்த நிறுத்தமோ இலகுவில் ஏற்பட்டுவிடக் கூடியதல்ல என்பதே இன்றைய அரசியல் நிலையாகும். அவ்வாறு இல்லாது இந்நிலை மாற்றம் அடைய வேண்டுமானால், டி. பி. விஜேயதுங்கா ஜனாதிபதி இல்லை என்ற நிலை உருவாக வேண்டும். அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சி முறை ஒழிக்கப்படவேண்டும். ஆனால், அது ஒரு நீண்ட தூரப்பயணம். அதில் வெற்றியும் கிட்டலாம் தோல்வியும் கிட்டலாம். இதில் ஈடுபடுவோர் அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதாகக் கூடமாறலாம். இந் நிலையில், ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுதல்/பாதுகாத்தல் என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் அரசியற்கட்சிகள்-பொது ஜன ஐக்கிய முன்னணி உட்பட- இலங்கையின் சுபீட்சத்திற்காக-தமது அரசியல் எதிர்காலத்தை விஷப்பரீட்சைக்கு உள்ளாக்குவார்களா என்பது சந்தேகத்திற்குரியதே.

---

... ஹேமா பிரேமதாசா மீது வஞ்சம் தீர்த்தது என்பதை நான் ஒரு போதும் ஏற்கமாட்டேன். ஏனெனில் நாம் அவருக்கு நன்மையையே செய்ய முயன்றோம். ஆனால் அவரின் பிடிவாதப் போக்கினால் அவருக்கு இக் கதி ஏற்பட்டது என ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பி.பி. சி. செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோவுக்கு அளித்த முன்னாள் ஜனாதிபதிக்கு மதிப்பளித்து ஹேமா பிரேமதாசாவுக்கு தேசியப்பட்டியலிலும், மகன் சஜித் பிரேமதாசாவுக்கு அம்பாந்தோட்டை தொகுதியிலும் இட ஒதுக்கீடு செய்தோம். அவர் இது தொடர்பாக சம்மதம் தெரிவித்து கையொப்பம் இட்டார். ஆனால் இறுதி நேரத்தில் இதனை முழுமையாக மாற்றி ஓர் தெளிவில்லாத நிலையில் இருந்தார் என மேலும் அவர் தெரிவித்தார்.

# என்னைக் கொல்ல புலிகள் எண்ணவில்லை

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் தாக்குதல் பட்டியலில் என் பெயர் முதலாவதாக இருப்பதாக பொய்ப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. உண்மையில் என்னைக் கொல்ல திட்டமிடுபவர்கள் புலிகளல்ல என சந்திரிகா குமாரணதுங்கா பொரளைச் சந்தியில் நடைபெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணித் தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

# மலையக ஐ. முவுடன் பொ·ஐ·மு. உறவு நெருக்கம்

## 'ராவய' ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையக ஐக்கியமுன்னணிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையேயான உறவு மேலும் வளர்ச்சியடைந்து வருவதாக ''ராவய'' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

மலை நாட்டில் மக்கள் மத்தியில் வேகமாக செல்வாக்கு செலுத்தி வரும் மலையக ஐக்கியமுன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சந்திரிகா குமாரணதுங்காவுக்கும் இடையே இவ் ஒற்றுமை காணப்படுவதாகவும் இவ் இருவரும் பல தேர்தல் பிரசாரங்களை ஒன்றிணைந்து மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் இன்று தெனியாயவில் நடைபெறவுள்ள கூட்டம் சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையில் நடைபெறும் என்றும் இதில் விசேட பேச்சாளராக திரு. சந்திரசேகரன் கலந்து கொள்ள இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

# தி. மு. கவுடன் இணையமாட்டோம் கோபால்சாமி அறிவிப்பு

(சென்னை)

தி.மு.கவுடன் வை. கோபால்சாமியின் ம.தி. மு. க மீண்டும் இணைக்கப்பட மாட்டாது. ம.தி மு.கவின் வளர்ச்சியைக் கண்டு கலக்கமடைந்துள்ள சிலர் தவறாக பிரசாரம் செய்து வருகின்றனர். இவ்வாறு வை. கோபால்சாமி சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் கருணாநிதி தனது கட்சியில் இருக்கும் தொண்டர்களை தக்கவைத்துக் கொள்ள பெரும்பாடு படுகிறார். நான் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களுக்கும் சென்று வருகின்றேன். ம. தி. மு. கவிற்கு மக்கள் ஆதரவுஅமோகமாக இருப்பதை காண முடிகிறது. வருங்காலத்தில் ம. தி மு, க தான் உண்மையான திராவிட இயக்கம் என்பது நிரூபிக்கப்படும்.

அ தி.மு.க அரசின் ஊழல்களை மக்களிடம் எடுத்துரைப்பதே ம தி. மு.கவின் பிரதான கடமை. எனவே தி மு. க பற்றியோ, கருணாநிதி பற்றியோ விமர்சிக்க எங்களுக்கு நேரம் இல்லை எதிர் காலத்தில் சமரசம் ஏற்பட்டு விடும் என்று செய்தி கொடுப்பவர்களுக்காக நான் அனுதாபப்படுகின்றேன்.

# மத்திய அரசின் செயலால் ராஜிவிற்குஆபத்துஏற்பட்டது

## -ஜெயின் கமிஷன் முன் தகவல்

(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியை ஆபத்திற்கு உள்ளாக்கியது அப்போதைய மத்தியஅரசு தான். இவ்வாறு ராஜிவ்காந்தி கொலை பற்றி ஆராயும் ஜெயின் கமிஷன் முன்பாக சட்டத்தரணி வதேரா தாக்கல் செய்துள்ள இடைமறி மனு வொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், ராஜிவ் கொலை செய்யப்படலாம் என்று இந்திய உளவுத் துறைக்கு ஏற்கனவே தெரிந்துள்ளது. படுகொலைச் சம்பவம் நடந்த 1991 மே 21-ம் திகதிக்கு முதல் நாள் ராஜிவுக்கு கறுப்பு பூனைப் படை பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் அவருக்கு கறுப்பு பூனைபடை பாதுகாப்பு விலக்கப்பட்டது ஏற்கமுடியாதது என்று உளவுத்துறை டைரக்டர் உள்துறை அமைச்சகத்திற்கு கடிதம் எழுதியுள்ளார். விடுமுறை நாளான 91 மே 20 அன்று அலுவலகத்தை திறந்து அவர் கடிதம் எழுதியிருப்பதால் இக் கொலை சதி பற்றி அவருக்கு முன்பே தெரிந்திருக்க வாய்ப்புண்டு என்கிற கேள்வி எழுகிறது.

ஆனால் அப்போது கபினட் செயலராக இருந்த பாண்டே ராஜிவ் காந்திக்கு அளிக்கப்பட்டு வந்த கறுப்பு பூனைப் படை பாதுகாப்பை விலக்கிக் கொள்வதாக தானே அறிக்கை தயாரித்து அப்போதைய பிரதமரிடம் ஒப்புதல் பெற்றுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 09 செவ்வாய் இரவு

08. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10 - அறிந்து கொள்ளுங்கள் தகவற் களஞ்சியம்
08. 20 - நலந்தானா''மதுபானத்தால் ஏற்படும் பிரச்சினைகளும் நோய்களும், அதற்கான ஆலோசனைகளும்''
08. 30 - செய்திகள்
08. 40 - கருத்துக்களம்
08. 50 - களமும் கானமும் - ''அர்த்தம்.''

### 1994. 08. 10 புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# படைத்தளம் உஷார்படுத்தப்பட்ட நிலையிலும் புலிகள் விமானத்தளத்தினுள் ஊடுருவினர்

## பலாலித் தளம்மீதான கரும்புலித்தாக்குதல் குறித்து சண்டேலீடர்

(கொழும்பு)

இருளின் துணையுடன் பத்து கரும்புலிகள் மாதகலுக்கும் கீரிமலைக்கும் இடையில் உள்ள ஒரு பகுதிக்கு கடல் வழியாக கடந்தமாதம் 31-ம் திகதி நீந்தி கரையேறினர். இவர்கள் இராணுவ சீருடை போன்ற சீருடையணிந்து தற்கொலை தாக்குதலுக்கான வெடிமருந்து மற்றும் ஆயுதங்கள் என பெருமளவு பொருள்களையும் சுமந்து வந்திருந்தனர். சிறிய குழுவிலான இவர்கள் தரையில் ஊர்ந்து இராணுவ முன்னணி காவல் நிலைகளைக் கடந்து தமது இலக்கு நோக்கி நகர்ந்தனர். இவ்வாறு பலாலி இராணுவ தளம் மீதான கரும்புலிகள் தாக்குதல் குறித்து கொழும்பு சண்டேலீடர் பத்திரிகையில் அதன்பாதுகாப்புச்செய்தியாளரான இக்பால் அதாஸ் விபரித்துள்ளார்.

'பலாலியினுள் பேரழிவு' என்ற தலைப்பில் அவர் இச்சம்பவம் குறித்து மேலும் விபரிக்கையில், ஊடுருவிய புலிகள் இப்பகுதியில பற்றைகளினுள்ளும் கைவிடப்பட்ட கட்டடங்களினுள்ளும் மறைந்தவாறு முன்நகர்ந்தனர். மாவிட்டபுரம் கோவிலையடைந்த இவர்களில் அறுவர் தனியாக ஒரு குழுவாக பிரிந்து கிழக்கு புறமாக விமானத்தளம் இருக்கும் வசாவிளான் நோக்கி நகாந்தனர் எஞ்சியவர்கள் அப்பகுதியில் ஒளிந்திருந்தனர்.

### முகாமகள் உஷார் படுத்தப்பட்டன

ஆகஸ்ட் முதலாம் திகதி மாலை வீதியருகே இரு இராணுவ ரோந்துப் படையினர் ஊடுருவியபுலிகளில்ஒருவரைக் கண்டனர். துப்பாக்கி மோதல் இடம்பெற்றது. தொடர்ந்து பெரும் வெடியோசையும் கேட்டது. படையினர் உஷார்படுத்தப்பட்டனர். வீதித் தடைகள் முகாமிற்குள் போடப்பட்டு தேடுதல் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு மணிநேரத்தின் பின்னர் காவலரண் ஒன்றிலிருந்த படையினர் தமது சகாக்கள் போன்ற மூவர் அப்பகுதியில் கடந்து செல்வதைக் கண்ட பற்றைகளினுள் ஓடி மறைந்து விட்டனர்.

பிரதான நடவடிக்கை அலுவலகத்திலிருந்த அதிகாரிகள் உஷாராகினர். அவர்கள் கட்டளையக நிலைகளை உஷார் செய்து படையினரை நடவடிக்கையில் இறங்கச் செய்யுமாறும் புலிகள்ஊடுருவிவிட்டனர் என்றும் அறிவித்தனர் எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்தனர். ஆனால் அச்சமயத்தில் 9 புலிகள் ஏற்கனவே ஊடுருவி விட்டனர் எனவும் அவர்களில் 6 பேர் உயர் பாதுகாப்பு நிலையமான விமான தளத்தினுள் ஆளமாக ஊடுருவி விட்டனர்எனவும் அவ்வதிகாரிகள் அறியவில்லை

### முகாமிற்குள் தீவிர தேடுதல்

பாதுகாப்பு முன்னணி நிலைகளிலும், பதுங்கு நிலைகளிலும், வீதித் தடைகளிலும் நின்ற அனைத்துப் படையினரின் விரல்களும் தமது துப்பாக்கியின் ட்ரிகரிலேயே இருந்தது. கடும் இருளாக இருந்ததால் அவர்களால் மேற்கொண்டு எதுவும் மேற்கொள்ள முடியாது இருந்தது

முகாமில் பிரிகேடியர் சரத் பொன்சேகா மறுநாள் காலையில் தேடுதல் நடவடிக்கையை எவ்வாறு அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்வது என்று ஏனைய அதிகாரிகளுடன் திட்டமிட்டார். அப்போதே கொழும்பிலிருந்து வடபகுதி திரும்பியபோது கட்டளை அதிகாரி பிரிகேடியர் அசோகா ஜெயவர்தனா திட்டத்தை மேற்பார்வையிட்டார்.

நள்ளிரவு எந்த அசம்பாவிதமும் இன்றி கடந்தது. எந்த அசம்பாவிதமும் நடக்காததினால் படையினரிடையே ஒரு நிம்மதி நிலை ஏற்பட்டது ஆனால் அந்த நிம்மதி குறுகிய நேரமே நீடித்தது அதிகாலை 3 மணிக்கு மூத்த இராணுவ அதிகாரிகள்விமானப்படைத்தளத்திலிருந்து வந்த அவசர அழைப்புகளால் உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்டனர்.

### 100 புலிகள் தாக்குவதாக எண்ணினர்

விமானப்படை தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக அழைப்புக் கூறியது. எதிர்த்தாக்குதலுக்காக அப்பகுதிக்கு டாங்கிகள் சென்றன, 100 அல்லது அதற்கு மேற்பட்ட புலிகள் விமானப்படை தளத்தை தாக்குவதாக மூத்த இராணுவ அதிகாரிகள் எண்ணினர்.

ஆனால் மேலதிக படைகள் சம்பவ இடத்தை அடைந்தபோது அனைத்தும் ஓய்ந்து விட்டிருந்தது. நிறுத்திவைக்கப்பட்டிருந்த அமெரிக்கத் தயாரிப்பு பெல் 212 ரக ஹெலிகப்டர் தீயில் எரிந்து கொண்டிருந்தது, நான்கு கெரில்லாக்களும் விமானப் படையை சேர்ந்த கோப்ரல் கருணாதிலக ஆகியோரும் அங்கு இறந்துகிடந்தனர். கெரில்லாக்களின் உடல் வெடிகுண்டால் சிதறிக்கிடந்தது.

விமானத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த விமானங்கள், கட்டுப்பாட்டு கோபுரம், விமானப்படை நடவடிக்கை அலுவலகம், எண்ணெய்க்குதம், மற்றும் ஆயுதகிடங்கு என்பன புலிகளின் இலக்குகளாக திட்டமிடப்பட்டிருந்தது. இவை அனைத்தும் தாக்கப்பட்டிருந்தால் அந்நிலையை எண்ணிப்பார்க்கவும் முடியாது.

### 'பெல்' எரிவதை பார்த்து நின்றனர்

பெல் விமானம் தீயில் எரிவதை விமானிகளும் விமானப்படை பராமரிப்பு பொறியியலாளர்களும் தமதுகட்டடத்திலிருந்தவாறு யன்னல்களூடாக நேரில் கண்டனர். அந்த ஹெலிகப்டர் அவசரகால நடவடிக்கைகளுக்காக பறப்பதற்கு ஆயத்தமாகும் பகுதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. தாக்குதல் வேளையில் விமானப்படையினர் எவ்வாறு செயற்படவேண்டும் என பயிற்சியளிக்கப்பட்ட தற்கு அமைய அவர்கள் செயற்பட ஆரம்பித்தனர். விமானப்படை பொறியியல் குழுவும் ஏனையோரும் விமானங்களை உடனடியாக கிளப்புவதற்காக அவற்றை நோக்கி ஓடினர். அப்போது கரும்புலி கெரில்லா ஒருவர் ஜேர்மனி தயாரிப்பு ஹெக்லர் கொஹ் சைலன்சர் பொருத்திய தன்னியக்கி துப்பாக்கியை அப்படையினரை நோக்கி இயக்கினார். ஈ. ஏ. கருணாதிலக எனும் விமானப் பராமரிப்பு குழுவைச் சேர்ந்தவர் ஒருவர் வீழ்ந்து இறந்தார் எஞ்சியவர்கள் தொடர்ந்து ஓடினர். இரு புக்காரா விமானங்களும் ஒரு சியா மார்செட்டி விமானமும் இயக்கப்பட்டது மூன்று இளம் விமானிகள் அவற்றை ஓடுதளத்தில் விரைவுபடுத்தி மேலேழுந்து பறந்தனர். ஒரு மணிநேரத்தின் பின் அவர்களின் மூன்று விமானங்களும் வவுனியா விமான தளத்தில் இறங்கின.

### தளபதிகள் பலாலி விரைவு

இவ் விமானங்கள் பலாலியிலிருந்து மேலே புறப்பட்ட வேளையில் தரையில் பெரும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது- ஒரு மணி நேரம் கடும் மோதல் தொடர்ந்தது காலையில் கொழும்பில் உயர் அதிகாரிகளுக்கு சம்பவம் தெரியப்படுத்தப்பட்டது-அன்றைய தினம் தனது மகனின் திருமண வைபவத்தை முடித்து விட்டு திரும்பிய ஜெனரல் ஹமில்டன் தலைமையில் உயர் அதிகாரிகள் குழுவினர் பலாலி விரைந்தனர்- இக்குழுவில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க ஆகியோர் இடம் பெற்றனர்-

இவர்கள் பலாலி வந்து சேர்ந்தபோது முகாமினுள் தேடுதல் தொடர்ந்த வண்ணமிருந்தது. மூத்த அதிகாரிகள் நடவடிக்கைகள் முறைகளை மாற்றி அமைக்கும் நடவடிக்கையில் தீவிரமாக இருந்தனர்-தேடுதலின்போது தளபதி பலாலியில் உயர் அதிகாரிகளிடையே வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் பாதுகாப்பு மாநாட்டை தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இம்மாநாட்டில் எதிர்வரும் தேர்தல் சுமுகமாக நடக்க பாதுகாப்பில் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டிருந்தது. இம்மாநாட்டிற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தலைமை வகித்தார். விமானப்படை தளபதியும் கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பாரிய சேதம் விளைவிக்கும் கெரில்லாமுறை

இந்த ஊடுருவல் தந்திரோபாயம் சிறிய குழுவினால் பாரிய சேதம் ஏற்படுத்தும் கெரில்லா முறையை காட்டுகின்றது. இதன் மூலம் தம் ஆட் சேதத்தை குறைக்க புலிகள் முயல்கின்றனர். சிறிய குழுவினால் பேரிடியை கொடுப்பது தமது போரிடும் தன்மையை தொடர்ந்து பேண அவர்களுக்கு உதவுகிறது,

விழிப்புடன் இருப்பது மட்டும் பாதுகாப்பு நடவடிக்கையாக அமையாது, தொடர் பதிலடி நடவடிக்கை புலிகளின் போர் முயற்சியை ஒழிக்கும் என இக்பால் அதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

---

வடபகுதிக்கு

தெரிவிக்கப்பட்டனர்.

கலகத்

---

## இடமாற்றம்

யாழ். கல்வித்திணைக்களத்தில் இருந்து பாசையூர் கடற்கரைவீதிக்கு மாற்றப்பட்டிருந்த பாடசாலைகளின் வேலைத்திட்ட (பொறியியல்) கட்டடப் பகுதி மீண்டும் யாழ் கல்வித்திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக மேற்படி பகுதிக்கு மாற்றப்பட்டிருந்த கட்டடப்பகுதி தற்சமயம் யாழ் கல்வித்திணைக்களத்தில் மீண்டும் இயங்கி வருகின்றது.

---

## எட்டாவது தமிழ் மாநாடு தஞ்சாவூரில் ஜனவரியில்

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு எதிர்வரும் ஜனவரி முதலாம்திகதி முதல் தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது. ஐந்து நாட்கள் தொடர்ந்து நீடிக்கவுள்ள இத் தமிழ் மாநாட்டில் வெளிநாடுகளிலுள்ள தமிழறிஞர்கள் கலந்து கொள்வார்கள் என்றும், கவியரங்கம், பட்டிமண்டபம், இசையரங்கம் நடன அரங்கம் என்பன இடம்பெறும் என்றும், சோழர் காலம் பற்றிய ஒளி, ஒலி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் மாநில வருவாய்த்துறை அமைச்சர் எஸ் டி சோமசுந்தரம் தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

---

### ஊன்று கோல்கள் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது ஊன்றுகோல்களுக்கு மிகவும் தட்டுப்பாடு நிலவுவதால் யாழ். போதனா வைத்தியசாலை ஊடாக நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட ஊன்றுகோல்களை அவற்றின் பாவனை முடிந்தவர்கள் வைத்தியசாலை பணிப்பாளரிடம் ஒப்படைத்தால் இக்கால கட்டத்தில் அது மிகவும் பயனுடையதாக இருக்குமென பணிப்பாளர் விநயமாக கேட்டுக் கொள்கின்றார். (21)

---

பொதுஜன

பல கோணங்களில் இக் கணிப்பீடு எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மொத்த வாக்காளர்களில் சுமார் 35வீத வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி பெறும் என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அறுபத்தி ஐந்து சதவீத வாக்குகளைப் பெறும் என்றும் புதிய வாக்காளர்களில் முப்பது சத வீதத்திற்கும்குறைவானவர்கள் ஐ. தே. க வை ஆதரிப்பதாகவும், 70 சதவீதத்திற்கும் அதிகமான புதிய வாக்காளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதாகவும் அக் கருத்துக் கணிப்பீடு தெரிவித்துள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவாளர்களில் எழுபது சதவீதத்தினர் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதாகவும் முப்பது சதவீதத்தினரே ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதாகவும் அக் கருத்துக் கணிப்பீடு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆட்சியைத் தீர்மானிக்கும் வாக்காளர்களில் முப்பது சதவீதம் மட்டுமே ஐ. தே. கவிற்கு கிடைக்கும் என்றும் மீதி எழுபது சதவீத வாக்குகளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கே கிடைக்கும் எனவும் தெரிவிக்

---

பிலிப்பைன்சின்

வடக்கு - கிழக்கு பகுதியில் உள்ள படையினர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை மேலும் கூறுகையில், முடிவு தெரியாத, குறிக்கோள் இல்லாத ஒரு யுத்தத்தில் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், இதே நிலையில் எமது சகோதரர்கள் இத்தகைய முடிவை ஏற்பதில் உறுதியாக இருப்பர் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 வருடங்களில் எமது சிங்கள இளைஞர்களின் பெறுமதிமிக்க உயிர்கள் பறிபோய்க்கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கில் படையினர் உயிர் துறக்கும் போது ஆட்சியாளர்களும், படைத் தளபதிகளும் அலட்சியம் செய்து வருவதாகவும், இதனால் கீழ் மட்டப் படையினர் மனம் நொந்து போயுள்ளதாகவும் மேலும் பல பொலிசாரும் இராணுவத்தினரும் புலிகளிடம் கைதாகி இருப்பதாகவும், அவர்களை விடுவிக்கத் தானும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான எமது சகோதரர்கள் காடுகளிலும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள முகாம்களிலும் பட்டி மாடுகள் போல் காலங்காலமாக அடைத்து வைக்கப்பட்டு இருக்கின்றனர். ஆகவே தொடர்ந்து ஆட்சியில் இருக்கும்வன்முறையாளர்களை அகற்ற வேண்டுமென்று நினைப்பது தவறானதாகாது. வெளிநாட்டுப் பயணங்கள் செய்வதும், சுற்றுலா செல்வதும், கட்சி மாறுவதும், தரகுப் பணம் பெறுவதுமே ஆட்சியில் இருப்பவர்களின் நோக்கம் ஆகும். அரசியல் வாதிகளுக்கு நாட்டைக் காப்பதில் எவ்வித அக்கறையும் இல்லை.

அத்துடன் இன்று வடக்கு-கிழக்கு காடுகளில் மரண பயத்தால் வாடும் இளைஞர்கள் றோயல், தொமியன் போன்ற நகரப் பாடசாலைகளில் படித்தவர்களல்ல. கிராமத்து மகா வித்தியாலயங்களிலும், ஏனைய பாடசாலைகளிலும் படித்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவர்கள் ஆவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்

படையினர் தமது சகாக்கள் போன்ற மூவர் அப் பகுதியில் கடந்து செல்வதைக் கண்டனர் எனினும் அவர்களை நிற்குமாறு கூற அம் மூவர்களும் தப்பியோட முயன்றனர். காவலரணிலிருந்த படையினர் துப்பாக்கிச்சூடு நடத்த அவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றைய இருவர்களும் அருகிலுள்ள

### பலாலி மீதான

தும் அந்த அதிகாலை வேளையில் தெளிவான தொலைத் தொடர்புகளைப் பலாலியுடன் மேற்கொள்வதற்கு வசதியாக வழமையாக அதிகாலை 5-30 மணிக்கு ஆரம்பிக்கும் வன்னி ஒலிபரப்புச் சேவையின் காலை ஒலிபரப்பு இரத்து செய்யப்பட்டது பலாலியில் பாதுகாப்பை பலப்படுத்தி உறுதிப்படுத்த வவுனியாவிலிருந்து மேலதிக துருப்புகளும் விசேடபொலிசாரும் விரைவாக அனுப்பிவைக்கப்பட்டனர் என அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### மருத்துவ

வுள்ளது என மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பெரும்பான்மை ஆசிரியர்கள் இம் முடிவை எதிர்த்த போதும் மருத்துவ சபை இம் முடிவை எடுத்துள்ளதாக மருத்துவ மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

### பலாலி

மும் கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகளில் இராணுவத்தினரின் முன்னிலைக் காவலரண்களுக்கருகில் உள்ள வீடுகள் தகர்க்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது. வீடுகள் தகர்க்கப்படும் சத்தங்கள் பல மைல் தொலைவு வரை கேட்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

### வடபகுதிக்கு

தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரச அதிபர் கொழும்பில் யாழ் மாவட்டத்திற்கான வீதிகள் புனரமைப்புக்கென தேவையான தாரை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலரைச் சந்தித்து அனுமதி கோரிய சமயம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டதாக அறியவருகின்றது.

எனவே வீதிகள் திருத்தப்பட்டு அரையும் குறையுமாக உள்ள இவ் வேளையில் பாதுகாப்பு அமைச்சின் இந் நடவடிக்கையானது வீதிகள் புனரமைப்புப்பணியைப் பெரிதும் பாதித்துள்ளது.

அத்துடன் மக்களும் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர் நோக்க வழிகோலியுள்ளது என கருத்து தெரிவிக்கப்படுகின்றது. [பா]

### சுவிஸ்

மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வன்மையாக கண்டிப்பதுடன் இலங்கையில்அனைத்து தமிழ்மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுசகஜநிலைக்குவரும் வரை அகதிகளை திருப்பி அனுப்ப எடுக்கும் முயற்சிகளை கைவிடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழீழ தகவல் நடுவத்தின் சுவிஸ் கிளை உறுப்பினர் பிரபா கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் மக்களை திருப்பி அனுப்புவதற்கெதிராக மக்கள் நடத்தும் நியாயமான அனைத்துப் போராட்டங்களுக்கும் நன்றி தெரிவித்தார் இவ்வார்ப்பாட்டமும் கூட்டமும் பகல் 1.30 மணி முதல் இரவு 7 00மணி வரை நடை பெற்றன.

என பயிற்சியளிக்கப்பட்ட

### கலகக்

நவீன சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கொள்ளையிடல், தீவைத்தல், தாக்குதல், கொலை முயற்சி, சட்டவிரோதமான வீடுகள் மற்றும் கட்டிடங்களிலுள் புகுதல் போன்ற கலக சம்பவங்களை கண்டால் அதில் ஈடுபடுபவர்களை கண்டவுடன் சுட்டுக்கொல்ல பொலிசாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையில் கூடியபோது அவசரகால நிலைமைகளை கையாள்வது தொடர்பாக திட்டமிடப்பட்டுள்ளது. தேர்தலை அமைதியாக நடத்துவது தொடர்பாகவும், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் உறுதியான தன்மையை பேணுவது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பொலிஸ்மா அதிபருடனும், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுடனும் தேர்தலுக்குப் பின் அமைதி பேணுவது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

வன்முறைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக பொலிசார் பல குறுக்கீடுகளை சந்தித்து வருவதாக பொலிஸ் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். கல்லெறி மற்றும் குழு ரீதியான மோதல்களில் சிலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

கலகம் அடக்குவது தொடர்பாக இஸ்ரேலிய பாணியிலான நீர்த்தெறிப்பு சுடுகலன்களை பயன்படுத்துவது பற்றி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பொலிசாருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நடவடிக்கையில் தீவிரமாக இருந்தனர்-தேடுதலின்போது நீரில் மூழ்கும் சாதன உடை மற்றும் உணவுப் பொதிகள் என்பனவும் படையினரால் கண்டெடுக்கப்பட்டது-

இராணுவத் தளபதி சம்பவம் குறித்து முழு அறிக்கை கோரியுள்ளார்- விமானப் படைத்தளபதி இது குறித்து விசாரணை நடத்த கப்டன் அஜித் ஜெயசேகர தலைமையில் விசாரணைக் குழுவொன்றை அமைத்துள்ளார்-

பலாலிசம்பவம் இராணுவத்

### வடக்கு கிழக்கு

இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

அக் கடிதத்தில் வடக்கிலுள்ள வைத்தியசாலைகளில் தேவையான மருந்துவகைகள் கோதுமைமா, சீனி போன்ற உணவு வகைகள், உடுபுடவைகள், ஊனமுற்றவர்களுக்கான சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், செவிப்புலன் உதவிக் கருவிகள், எக்ஸ்ரே கருவிகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், அகதிகள் பாவனைக்கான கூடாரங்கள், ஜெனரேட்டர்கள் அடங்கிய முதலாவது தொகுதியை, அனுப்புவதற்காக விபரங்கள் கோரப்பட்டுள்ளன-

தேவைப்படும் மருந்துவகைகள், அனுமதிப் பத்திரங்கள், நிவாரணப் பொருள்களை அனுப்புவதற்கான வழிகள் ஒருங்கிணைப்பு நிலையம் போன்ற விபரங்களே கோரப்பட்டுள்ளன-

இந் நிவாரண திட்டத்துக்கு கனடா அரசு சகல உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது- இந் நிவாரண இயக்கத்துக்கு செயலாளராககிறிஸ் சந்திரசேகராவும், 5 கனேடிய எம்பிக்களும், தமிழ் அகதிகள் நலனில் அக்கறை கொண்ட கனேடிய சட்டநிபுணரான மார்க்ஸ் பேர்கனும் போசகர்களாகவும் உள்ளனர்-

கல்வித்திணைக்களத்தில் மீண்டும் இயங்கி வருகின்றது.

ஜன ஐக்கிய முன்னணிக்கே கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவர்களே இவர்கள் ஆவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வெளிவந்துவிட்டது ! விற்பனையாகிறது !

ஐந்து நாட்களில் அமோக விற்பனை
கையிருப்பில் குறைவான நாடாக்களே உள்ளன
ஏமாற்றத்தைத் தவிர்க்க

இன்றே வாங்குங்கள்

## "நல்லை முருகன் பாடல்கள்"

(பாடல் ஒலிப்பதிவு நாடா)

பக்திரசம் சொட்டச் சொட்ட நல்லை முத்துக்குமரன் மேல்
கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய பாடல்களை
ஈழத்தின் இசையரசு கண்ணனின் இசையில்
இசைக் கலைமணி வர்ணராமேஸ்வரன் பாடியுள்ளார்.

அழகிய மூவர்ண அட்டையுடன்
இனிமையும், சுவையும், கருத்தும், இணைந்த இசையமுதம்
பாடல்களைக் கேட்டுப் பரவசமடையுங்கள்.

கீழ்க்காணும் இடங்களில் மட்டும் தரமான ஒலிப்பதிவுடன்
மூவர்ண அட்டையுடன் கூடிய
நல்லை முருகன் பாடல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
முகப்பு அட்டையற்ற ஒலி நாடாக்களை வேறிடங்களில்
வாங்கி ஏமாறாதீர்கள்.

கிடைக்குமிடங்கள்

**மாருதி வீடியோ விஷன்**
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

**நித்தியா ஸ்பொட்**
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

**சண் றைக்கோடிங் ஸ்பொட்**
நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

**ரவி ஒளி கானம்**
அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம். (சி-10076)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் -9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது